www.tamilarangam.net

Kaya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOM[B]
92600 ASNIERES SU[R]
- SEINE ; FRANCE



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாத நீராட்டு

**- இளஞ்செழியன் -**

உண்மைகள் மறைக்கப்பட்டு
உரிமைகள் மறுக்கப்பட்டு
சிங்கள தரகு முதலைகளால்
செந்நீராட்டப்பட்ட
தமிழ்த் தேசிய இனத்திற்கு
இன்று இந்திய முதலைகளின்
குடமுழுக்கு.

குட்டிமுதலாளித்துவ விடுதலை இயக்கங்கள்
பலாத்காரத்தினூல் பறித்தெடுத்த
தொழிலாளர் மானமெல்லாம்
இந்திய ஒடுக்கும் வர்க்கத்தின்
பாத நீராட்டு.

பறிகொடுத்த மக்களெல்லாம்
தூற்றல் மழைக்குள்
ஒதுங்குமிடம் வன்முறைக்கூடம்
இராணுவ முகாம்.

உணர்ச்சியற்று விரக்தியுற்ற
உடல்களில் சிலிர்ப்பு.
சிலிர்த்த மயிர்த் துவாரங்களினூடு
வரலாற்று ஆசான்களின் உணர்மை.

குமுறும் எரிமலை இதய ஒலிகள்
சமுதாயத்தின் நாடிநரம்புகளான
ஒடுக்கப்படும் வர்க்கத்தின்பால்
பிரசவம்.

தகர்ந்து நொருங்கிக் கொண்டிருப்பது
இந்திய, இலங்கை முதலாளித்துவ ஜூலை 29களின்
போலி ஒப்பந்தங்களல்ல
ஏகாதிபத்தியப் பின்புலம்.

உண்மைகள் மறைக்கப்பட்டு
உரிமைகள் மறுக்கப்பட
முதலாளித்துவ மிங்கில்லை.

வர்க்க பேதமற்ற
கம்யூனிஸத்தின்
முதல்படி.

www.tamilarangam.net

# புதிய நாடகமும், பழைய நடிகர்களும்.

ஜூலை 29 ஆம் திகதிக்குள் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது பற்றி ஜூலை 29 ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 3 ஆம்திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற இலங்கை, இந்திய அரசுப் பிரதிநிதிகளின் 'பேச்சுவார்த்தை' எந்தப் பலனுமின்றி வழக்கம்போல முறிந்துள்ளது. ஜே.வி பியை மிஞ்ச வேண்டும், எல்.ரி.ரி.ஈயைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்கங்களில் இந்திய இராணுவத்தை வெளியேறச் சொன்ன பிரேமதாசவின் 'சூரத்தனமும்', ஜே.ஆர் சொன்னால்தான்(?) போவோம், இலங்கையில் உள்ள தமிழருக்கு முழு அதிகாரமும்(?) கொடுத்தால்தான் வெளியேறுவோம் என்ற இந்திய அரசின் சண்டித்தனமும் தொடர்ந்து இழுபறி நிலையாகவே இருக்கின்றன.

சார்க் மகாநாடு நடக்க இருக்கும் நேரத்தில் அந்நியப்படைகள் இலங்கையில் இருப்பது அதன் இறைமையைப்(?) பாதிக்கும் என முதலில் காரணம் சொன்ன இலங்கையரசு இப்போது, தங்களுக்கு உதவி செய்ய வந்தவர்களாலேயே தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறது. தமிழர்கள் இலங்கைப்படையின் பாதுகாப்பைத்தான் விரும்புகிறார்களாம். அதனால் இந்திய இராணுவம் போனதும் இலங்கைப்படைகள் தமிழர்களுக்குப் 'பாதுகாப்பளிக்க' வடக்கு, கிழக்குப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்களாம். 1977ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த தமிழ் பேசும் மக்களுக்கெதிரான இலங்கையரசின் பகிரங்கப் போர்ப் பிரகடனத்தையும், படுகொலைகளையும், சித்திரவதைகளையும், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னை இந்த இரண்டுவருட காலங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மறந்து போய்விடுவார்கள் அல்லது மன்னித்து விடுவார்கள் என்று நினைத்துக்கொண்டிருப்பது இலங்கையரசின் முட்டாள்தனமே.

'புலிகளின் தாகம், தமிழீழத் தாயகம்' என்ற கோசத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுப்பிக்கொண்டு, எல்லா வகையான 'பகிரங்கப்' பேச்சுவார்த்தைகளையும் நிராகரித்து, உக்கிரமாகச் சண்டை பிடித்துக் கொண்டிருந்த எல்.ரி.ரி.ஈ இப்போது தனது முந்தைய அடாவடித்தனங்களின் பின்விளைவால் தங்களுடன் கூடிக் குலாவுதால் இலங்கையரசு வேண்டுமானால் தமிழ்பேசும் மக்கள் பணிந்துவிட்டதாக கற்பனை பண்ணிக் கொள்ளலாம். ஆனால் இலங்கையின் ஆளும் வர்க்கங்களால் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்ட காயங்களை பாதிக்கப்பட்ட மக்கள் மறந்துவிடவில்லை. அரச ஒடுக்குமுறையிலும், அரச பயங்கரவாதத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களில் கொழுந்துவிட்டெரியும் விடுதலைத் தீ, தமது உரிமைகளையும், சுதந்திரத்தையும் மீட்டெடுக்கும்வரை அணையமாட்டாது. இத்தகைய நிகழ்வை தடங்கல் படுத்தியதாகத்தான் வரலாறுகள் இருக்கிறதே ஒழிய தடுத்ததாக இல்லை.

இந்திய இராணுவம் 'போனாலும் போய்விடலாம்' என்ற அச்சத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் விழுந்தடித்துக்கொண்டு 'மக்கள் தொண்டர் படைக்கு(?)' ஆட்கள் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே பலர் பலவந்தமாக கடத்தப்பட்டதுடன், தப்பியவர்கள் இலங்கையரசின் விமானங்களில் இருக்க இடமில்லாமல் நின்றுகொண்டும் கொழும்புக்குத் தப்பியோடி வருகிறார்கள். வடக்கு, கிழக்கிலிருந்து தஞ்சம்கோரி வரும் தமிழர்களுக்கு 'உதவ' இலங்கையரசு பம்பலப்பிட்டியில் முகாம் ஒன்றைத் திறந்துவைத்துள்ளது. இங்கு தங்குபவர்களுக்கான பாதுகாப்பு, உணவு போன்றவற்றை இலங்கையரசே "கவனித்துக்" கொள்ளுமாம்.

ஆக தமிழ் பேசும் மக்களின் நண்பராக நாடகமாடும் இலங்கையரசுக்கும், அதன் கூட்டாளிகளுக்கும் ஈ.பி.ஆர் எல்.எவ் தனது அடாவடித்தனத்தால் இன்னும் பலம் சேர உதவிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் இந்திய இராணுவத்தின் கூட்டுடன் எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்கள், அவர்களது உறவினர்கள், ஆதரவாளர்கள், எல்.ரி.ரி.ஈயுடன் கூட்டு வைத்திருப்பதால் ஈரோஸ் உறுப்பினர்கள் என்று தேடிப்பிடித்துக் கொலை செய்து வருவதுடன் தங்களினதும், இந்திய இராணுவத்தினதும் அராஜகங்களுக்கெதிராக குரல் கொடுப்பவர்களையும் கூட கொன்று வருகிறது. மக்கள் தொண்டர் படைக்கென ஈ.பி.ஆர்.எல்.எவ் இளைஞர்களை கடத்திச் செல்வது பற்றி எழுதியதால் முரசொலி பத்திரிகை ஆசிரியரின் மகனை ஈ.பி.ஆர்.எல் எவ் சுட்டுக் கொன்றது. பத்திரிகை ஆசிரியர் திருச்செல்வம் கொலை முயற்சியிலிருந்து தப்பிக் கனடாவுக்குப் போய்விட்டார். இது ஒரு சம்பவமே.

அராஜகத்திற்கெதிராகக் குரல் கொடுப்பவர்களை தேடியழிக்கும் எல்.ரி.ரி.ஈ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் நடவடிக்கைகளினால் நாட்டைவிட்டு மக்களின் வெளியேற்றம் தொடர்ந்து அதிகளவில் நடைபெறுவதுடன் எல்.ரி.ரி.ஈயிலும் புதிதாகப் பலர் சேர நிர்ப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பந்திக்கிறது.

பாராளுமன்றத்திற்குப் போகமாட்டோம், அராஜக சக்திகளுக்கெதிரான எதிர்ப்பை வெளிக்காட்டவே தேர்தலில் போட்டியிட்டோம் என்று அறிக்கைகள் விட்ட ஈரோஸ், எல்.ரி.ரி.ஈ-இலங்கையரசு பேச்சுவார்த்தையில் தமது 'கோரிக்கைகள்" நிறைவேற்றிவிட்டதாகக் கூறி, பிரேமதாசவைச் சந்தித்துத் தமது 'பாராட்டை'த் தெரிவித்து இலங்கையரசின் 'ஆளுமையை" ஏற்று, சத்தியப்பிரமாணம் செய்து, பாராளுமன்றத்திற்குள் போயுள்ளனர். பாராளுமன்றத்தை முன்னர் பகிஷ்கரித்ததன் மூலம், முந்தையத் தமிழ்த் தலைமைகளால் கட்டிவளர்க்கப்பட்ட 'பாராளுமன்றம் மூலமே அனைத்தையும் சாதிக்கலாம்'என்ற மாயை ஓரளவுக்கு விரட்ட துணைபுரிந்த ஈரோஸ் இப்போது தனது குத்துக்கரணத்தால் மக்களை மீண்டும் பழைய மாயைக்குள் தள்ளிவிட்டுள்ளார்கள். பழைய துரோக தலைமைகளுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்ல என்றும் நிருபித்துவிட்டார்கள்.

'தாகத்தை'யெல்லாம் பறக்கவிட்டு, இலங்கையரசின் செலவில், கொழும்பு ஆடம்பர கொற்றேல்களில் தங்கியிருக்கும் எல்.ரி.ரி.ஈயினர் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம், மூன்றும் கட்டம்... என்று இலங்கையரசைச் சந்தித்துக் 'கதைத்துக்'கொண்டிருக்கிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் இலங்கையரசுக்கெதிராகப் படைதிரட்டுகிறார்கள், அவர்களிடமிருந்து தப்பி வரும் இளைஞர்களுக்கு 'இலங்கையரசுதான்"பாது காப்பளிக்க வேண்டும், இந்திய இராணுவம் வெளியேறவிட்டால் பிரேமதாசவுக்கு உறுதுணையாக இருப்போமென்றெல்லாம் அறிக்கைகள் விட்டு தமது கூட்டாளியான 'இலங்கையரசை' தமிழ்பேசும் மக்களுக்கு நண்பர்களாகவும், இந்திய அரசு 'மட்டுந்தான்' எதிரியென்பது போலவும் சித்தரிக்கிறது. கூடவே இந்திய அரசுடனும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என அறிவித்து இந்திய அரசும் நண்பர்தான் என்று காட்ட முனைகிறது. கொழும்பிலிருக்கும் எல்.ரி.ரி.ஈயினருக்கு தற்போது பாது காப்பளிப்பது முன்பு வடக்கு, கிழக்கிலும், இப்போது மலையகத்திலும், தெற்கிலும் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்ட இலங்கையரசின் கொலைப் படையான எஸ்.ரி.எவ் எனப்படும் விசேட அதிரடிப்படையினரே என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக, ஒவ்வொரு இயக்கங்களும் தங்கள், கூட்டாளிகளைத்தான் மக்களின் நண்பர்கள் எனவும், மற்றவர்களை எதிரிகள் எனவும் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கின்றனர். இந்த ரீதியில் இலங்கையரசுதான்" இப்போதைக்கு" எதிரி(?) என்று ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோக் குழுக்களும், இந்திய அரசு மட்டுந்தான் "இப்போதைக்கு" எதிரி(?) என்று எல்.ரி.ரி.ஈயும், இலங்கையரசும், இந்திய அரசும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பறவாயில்லை'(?) என்று ஈரோசும் தங்களது வர்க்க நலன்களுக்கு ஏற்ப கூட்டு வைத்துக்கொண்டு, போராட்டத்தை மழுங்கடித்து வருகின்றன. வர்க்கச் சமரசத் தீர்வுக்கு மக்களை நிர்ப்பந்தித்து வருகின்றன.

இனவெறிக்குழுவான ஜே.வி.பியும் அரசுக்குச் சளைக்காமல் கொலைவெறியாட்டம் ஆடுகிறது. மாணவர்கள், தொழிலாளர்கள், ஏனைய புரட்சிகரச் சக்திகளைக் கொலை செய்து வருகிறது. இந்திய இராணுவ எதிர்ப்பை இந்திய மக்கள் எதிர்ப்பாக மாற்றியுள்ளது. இந்தியத் திரைப்படங்களை அரசு ஒத்துழைப்புடன் தடை செய்த ஜே.வி.பி ஏகாதிபத்தியங்களின் வன்முறை, பாலியல் போன்ற கலாச்சாரச் சீரழிவுக்குப்பைகளையும், வியட்நாம், நிக்கரகுவா போன்ற நாடுகளில் நடந்த புரட்சிகளைக் கேலியாகச் சித்தரிக்கும் எதிர்ப்புரட்சிகரப் படங்களையும் நாடெங்கும் திரையிட அனுமதித்துள்ளது. புரட்சியில் மக்களைச் சேரவிடாமல் சீரழிக்கும் இலங்கையரசினதும், ஏகாதிபத்தியங்களினதும் நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி.யும் இந்த விதத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்குகிறது.

இதைவிட தெற்கில் அரச வன்முறைச் சம்பவங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன. முன்பு தமிழ்பேசும் மக்களை 'பயங்கரவாதிகளை' அழிக்கிறோம் என்று ஆயிரக்கணக்கில் கொலை செய்து குவித்த பாசிச அரசு இப்போது ஜே.வி.பி.யினரை 'அடக்குகிறோம்' என்று சொல்லிக்கொண்டு தெற்கில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இலங்கையரசின் 'கறுப்புப் பூனைகள்', 'பிரா' என்ற கொலைக்கும்பல்கள் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றுள்ளன. பாதைகளில் வைத்து உயிருடன் கொளுத்துகின்றன. அரச கூலிப்படைகளான இராணுவம், பொலிசினால் கைது செய்யப்படுபவர்கள் 'காணமற்' போகிறார்கள். தடுப்புக் காவலில்கூட கூலிப்படையினரால் கொல்லப்படுகிறார்கள்.

பொதுக்கூட்டங்கள், தொழிற்சங்கக்கூட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. கருத்துச் சுதந்திரம் பச்சையாகவே பறிக்கப்பட்டுள்ளது. 'கண்ட இடத்தில்' 'யாரையும்' சுட்டுக்கொல்ல கூலிப்படைகளுக்குப்பகிரங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திறந்த பொருளாதாரக்கொள்கை மூலம் தமிழ், சிங்கள மக்களை நடுத்தெருவுக்கு விரட்டியதுடன், பலரை மத்திய கிழக்கு நாடுகளுக்கு உடல் உழைப்பை விற்க பண உதவி செய்தே அனுப்பி வைக்கிறது. பிள்ளைகளை விற்றல், பெண்களை அடிமையாக விற்றல் போன்ற கொடுமையான சம்பவங்களும் இந்த அரசின் கீழ்தான் 'நன்றாக' நடைபெறுகின்றன..

இப்படியான இந்த அரசுதான் 'சமாதான வேடம்'போட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

நாடகமாடுகிறது. இயக்கங்களும் இந்த நாடகத்துக்கு தங்கள் பாணியில் பூரண பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

தனது சொந்த நாட்டிலேயே மொழி வேறுபாடுகளில்லாமல் அனைத்து மக்களையும் ஒடுக்கும் ராஜீவ்தான் இலங்கையில் தமிழர்களின் 'உரிமைகளுக்காக' இந்தியப்படையை இலங்கையில் வைத்திருக்கிறதாம். இராணுவச் செலவினங்களிலும், கள்ளப் பேரங்களிலும், ஆளும் வர்க்கங்களின் ஆடம்பரவாழ்க்கைக்கான ஊதாரிச் செலவினங்களிலும் பெரும்பான்மையான மக்களை ஓட்டாண்டியாக்கி தெருவுக்கு கொண்டுவந்த இந்திய ஆளும் கும்பல் அந்த மக்களின் எழுச்சிப் போராட்டங்களை அடக்கும் இராணுவக் கூலிப்பட்டாளத்தைத்தான் தமிழர்களின் உரிமைகளைக் 'கிடைக்கச் செய்வதற்காக' இலங்கையில் வைத்திருக்கிறார்களாம்.

இரண்டு அரசுகளினதும், இயக்கங்களினதும் இப்படியான 'சூரத்தனங்களிலும்', 'சண்டித்தனங்களிலும்' அப்பாவி மக்கள் தொடர்ந்து பலியிடப்படுகிறார்கள். மக்களின் வெளியேற்றம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசுகளின் நோக்கங்களிற்கேற்ப மக்கள் போராட்டங்களிலிருந்து அந்நியப்படுத்தப்படுகிறார்கள்.

இந்த அபாயத்தை எதிர்க்க, உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவோம். இலங்கையில் இல்லாத, வெளிநாடுகளில் ஓரளவுக்கு இருக்கின்ற கருத்துச் சுதந்திரத்தை சரியானவழியில் முறைமையாகப் பாவித்து, எதிரிகளை மக்களுக்கு இனம் காட்டி, அராஜகம், பாசிசத்துக்கெதிரான குரலைப் பலப்படுத்துவோம்.




(42ஆம் பக்கம் பாருங்கள்)

www.tamilarangam.net

# ஐரோப்பிய தமிழ் சமூகமும் எழுத்தாளர் பங்கும்

— க. கலைச்செல்வம் —

இலங்கையின் அண்மைக்கால நிகழ்வுகள் பெருந்தொகையான இளைஞர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு இடம் பெயர்த்ததிலிருந்து அவர்களின் வாழ்வியலையும், அதன்பாற் தோன்றியுள்ள எழுத்தாளர்களையும் ஆய்வு செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஐரோப்பாவுக்கு இடம் பெயர்ந்தவர்களை 'ஐரோப்பிய தமிழ்ச் சமூகம்' என்று அழைக்கலாமா என்றொரு கேள்வியெழுகிறது. இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் ஒழுங்கமைந்த உற்பத்தி உறவுகளுடன் பிணைக்கப்பட்டு, சமூகமாக உருப் பெற்றிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆயினும் ஐரோப்பிய நாடுகளில் செறிந்துள்ள தமிழ் மக்களை அவர்களின் பொதுவான வாழ்வியல் பண்புகளோடு ஒழுங்கமைக்கும்போது இலங்கைச் சமூகம் என்றோ, தமிழீழச் சமூகமென்றோ குறிப்பிட முடியாத அளவுக்கு மாறுபட்டும், வெறுமனே தமிழீழ சமூகமென்றோ அல்லது இந்திய, இலங்கை, ஐரோப்பிய வாழ் தமிழ்ச்சமூகமென்றோ எல்லோரையும் முடிச்சுப் போட முடியாததுமான நிலையில் இடம்பெயர்ந்தஆரோக்கியமற்ற இருப்புநிலையிலும் இருக்கும் ஐரோப்பிய தமிழர்களை தற்காலிகமாகவேனும் ஐரோப்பியத் தமிழ்ச் சமூகம் என்று குறிப்பிட வேண்டிய தேவையாகிறது.

ஆயினும் ஈழத் தமிழர்களின் ஐரோப்பிய வாழ்நிலைகளையொட்டி எழுத்தாளர் பங்கைப் பற்றி ஆய்வு செய்ய முற்படுவதால் இந்தியத்தமிழ் மக்களின் ஐரோப்பிய வாழ் நிலைகளும், அதன் எழுத்தாளர்களும் இக்கட்டுரையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

பெரும்பாலான இளைஞர்கள் பொதுவாக அகதி அந்தஸ்துக்கோரி ஐரோப்பாவுக்கு இடம்பெயர்ந்தாலும் அவர்களது எதிர்காலம் பற்றிய குறிபொருள் நாடுகளுக்கு நாடுபொதுப் பண்புகள் மாற்றமடையாதநிலையில் வேறுபடுகின்றன. பொதுப் பண்புகள் என்று இங்கே குறிப்பிடப்படுவது

1) ஐரோப்பிய மக்களுடன் இரண்டறக் கலக்காதது.
2) நிரந்தரமான வாழ்க்கையிருப்பை இலங்கையாகவே உணர்வு கொள்ளுதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுபாடுகள் என்கிறபோது அது அவர்கள் வாழும் நாடுகளில் அகதிகளைப் பராமரிக்கும் சட்ட மூலங்களையும், வழிமுறைகளையும் பொறுத்ததாகும்.

குறிப்பாக பிரான்ஸ் வாழ் தமிழர்களின் சிந்தனை மனோபாவங்களை எடுத்துப் பார்க்கும் போது நிரந்தரமாகவே இங்கு இருந்துவிட முடியும், இந்த நாடு தம்மைத் திருப்பியனுப்பப் போவதில்லை என்ற நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் நிறையவே இருக்கிறது. அத்துடன்சொந்த உழைப்பிலேயே இவர்கள் வாழ்வு தங்கியிருக்கிறது.

இதே போன்று இத்தாலி வாழ் தமிழர்களை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு அகதி அந்தஸ்து இல்லாதபோதும் தாம்நாடு கடத்தப்படப் போவதில்லை, விரும்பிய நேரம் திரும்பிப் போகலாம், அதுவரை பணத்தைச் சேகரிப்போம், முடிந்தவரைக்கும் ஆரோக்கியமான வதிவிட உரிமைப் பத்திரத்தைப் பெற முயற்சிப்போம் என்ற மனப்பாங்கே இருக்கிறது.

ஆனால் ஜேர்மனி, கொலண்ட், சுவிஸ் வாழ் மக்களை நோக்கினால் இதோ அனுப்பப் போகிறார்கள்என்ற பீதி நிரந்தரமாகவே பலரின் மனதில் குடிகொண்டுள்ளது. பெரும்பாலானவர்கள் சொந்தமாக உழைக்க முடியாதாகையால் அகதிப் பணத்திலேயே வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

நோர்வே, டென்மார்க், சுவீடன் நாடுகளின் தன்மைகள் இவ்விரண்டு தன்மைகளிலிருந்தும் அதிகம் முரண்படாதவகையிலும் அதேநேரம் மற்றைய நாடுகளைவிடவும் அகதிகளின் கல்வித் தரத்தை உயர்த்தக் கூடிய அனுகூலங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆரோக்கியமான தொழிற்துறைக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாத வாழ்நிலை காணப்படுகிறது.

குறிப்பிட்ட நாடுகளின் தன்மைகளுக்கேற்ப ஒட்டுமொத்தமான ஒற்றுமையானதும், வேற்றுமையானதுமான பண்புகளைக் கொண்டிருப்பதே ஐரோப்பிய தமிழ்ச் சமூகமாகும். இங்கு வாழும் தமிழர்களில்நிரந்தரமாக வாழும் உரிமைகளைப் பெற்றுக் குடும்பங்களோடு வாழும் 5 வீதத்திற்கும் குறைவானவர்களைத்தவிர ஏனையோர் பலரும் தாம் இங்கு வாழ்வதாக ,வாழ்ந்கொண்டிருப்பதாக உணர்வு கொள்ளவில்லை. நாளைய வாழ்வுக்காக இன்று தம்மைத் தயார்படுத்திக் கொள்ளும் தற்காலிக ஒரு வசதியாகவே தமது தற்போதைய வாழ்நிலையை கருதுகிறார்கள். இக் கருதுகோளானது தாம் வாழும் நாட்டின் மொழிப்பயிற்சியையும் வளர்த்தெடுக்கவெண்ணாது, இங்குள்ள கலை, கலாச்சார அறிவியற் தன்மைகளுடனும் ஒத்துப் போகவியலாத தனித்துவமான உழைப்பையே முழு முயற்சியாகக் கொண்ட திறந்த வெளிச் சிறைச்சாலை வாழ்க்கையாகி விடுகிறது.

ஆயினும் இம் முதலாளித்துவ நாடுகளின் வசதி, வாய்ப்புகள் இவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'ர்களின் நடைமுறை வாழ்க்கையோடு மிகவும் ஒட்டிப் போய்விட்டதால், இந் நலன்களைவிட்டு இலங்கையில் போய் வாழும் மனநிலையையும் பலர் இழந்து விட்டார்கள். இந் நிலமையில் சொந்த நாட்டைப்பற்றிய ஆர்வம் அற்று, வளமான வாழ்வு இங்கும் இல்லையே என்ற ஏக்கமான தன்மையும், இலங்கைக்கும் போய் வாழ முடியாத தன்மையுமான முரண்பட்ட இரு தன்மைகளை உள்ளடக்கிக் கொண்டு நிரந்தரமில்லாத மனநிலையோடு நிரந்தரமாகிவரும் ஐரோப்பிய தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே இருக்கிறது.

இவர்களின் வாழ்வியல் மனோபாவங்களையும் தன்மைகளையும் விளங்கிக் கொள்வதற்கு—

"வசந்தக் கனவுகளுக்காய்
வானத்தில் பறந்துவந்தும்
நிலவுக்கு முகம் மறைக்க
முடியாமல் முகமிழந்தோம்.
சொந்த முகமிழந்து
இரவல் முகமும்பொருந்தாத
இரண்டும் கெட்டான்
வாழ்க்கையிது"

எனும் அருந்ததியின் கவிவரிகள் மிகவும் பொருத்தமானவையும், நிதர்சனமான உண்மையும்கூட. இந் நிலைமையில் இலங்கைச் சமூகத்தின் வாழ்வியல் போராட்டங்கள் இங்கு வாழ்பவர்களை இங்கேயே பதிப்பதற்கு தொடர்ந்தும் காரணமாகிவிடுகிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆயினும் ஐரோப்பிய தமிழ் சமூகம் இப் போராட்டத்தின்பால் எத்தகைய பிணைப்பைக் கொண்டுள்ளார்கள் என்ற நோக்க ஆழமான பார்வையை செலுத்த வேண்டும்.

ஐரோப்பிய தமிழ்ச் சமூகமானது முதலாளித்துவக் கல்வி மூலதனத்திற்காக உருவாக்கப்பட்ட குட்டி முதலாளித்துவ சக்தியை பெருமளவில் உள்ளடக்கியிருக்கிறது (ஐரோப்பிய தமிழ்ச் சமூகத்தில் பெரும்பாலானவர்கள்யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது). இங்கு முதலாளியாகவோ, சிறு முதலாளியாகவோ தன்னை உயர்த்திக்கொள்ள முடியாமலும், (நோர்வே, டென்மார்க் வாழ் மக்கள் நீங்கலாக) கல்விமான்களாகவும் வளர முடியாமலும் ஐரோப்பிய நலன்களான அடக்குமுறையின் கீழ் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதே நேரம் பாட்டாளிகளாகத் தம் மீது சுமத்தப்படும் சுமைகளில் உணர்வு கொள்ளாமல் முதலாளித்துவ மோகம் கொண்ட சமூகமாக உருவகப்படுத்தி நவீனப்பாட்டாளிகளாக இருக்கும் இந்த ஐரோப்பிய தமிழ்ச் சமூகம் மேலும் ஏற முடியாது கீழும் இறங்க முடியாத மனோநிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

பாட்டாளியாக இருந்து கொண்டே முதலாளியாக வாழ்வதாக அல்லது அவ்வாழ்வுக்குரிய வளத்தைப் பெற்றுக்கொண்டு விட்டதாக எண்ணிக்கொள்ளும் இந்த மனோநிலை பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் ஐரோப்பியத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிழ்ச் சமூகத்தை இணைப்பதிலிருந்து விடுபட்டு, அதற்கு எதிரானசக்திகளாக இருக்கச் செய்து விடுகிறது. இங்குள்ள சூழ்நிலை தருகின்ற முதலாளித்துவ எண்ணப்பாங்கு தம் வாழ்வுக்கு தாங்களாகவே உலை வைப்பதற்கு இவர்களை இன்னும் தூண்டிக் கொண்டிருக்கிறது.

இம் முரண்பாடான சமூகப் போக்குகளிலிருந்து ஐ.த.சமூகத்தை அவர்களுக்கே இனம் காட்டுவதும், சரியான திசை வழியைத் தெரிவு செய்வதற்கு தம்முள் அடங்கியுள்ள முரண்பாடுகளை வெளிக் கொணர்வதும், இச் சமூகத்தை அறிவு பூர்வமான, தம் உண்மையான வர்க்கத்திற்கு உழைக்கின்ற சக்திகளாக ஒருங்கமைக்க வைப்பதும் யார்? என்ற கேள்வி எழும் போதுதான் இவர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்ற கருத்துகள் பற்றியும், அதன் எழுத்தின் பங்கு பற்றிய பார்வையும் அவசியமாகின்றது.

கலை, இலக்கியங்கள் அந்தந்தக் காலத்து சமூக நிலைமைகளை பிரதிபலித்துக் கொண்டிருப்பவை. அதே நேரத்தில் இங்கு எழுத்தின் பங்கு என்று குறிப்பிடும்போது அந்த எழுத்துகள் எந்த வர்க்கத்திற்குச் சேவை செய்கின்றன என்பது அல்லது சமூக முரண்பாடுகளைத்தேடும் முயற்சியில் அடிப்படையை விளங்கிக் கொள்ள எவ்வளவு தூரம் ஆழமாக, ஆரோக்கியமாக அலசி இனம் காட்டுகின்றன என்பதே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஐ.த.சமூகத்தில் உள்ள முரண்பாடுகளை ஆய்வு செய்து அலசும் எழுத்துகளையோ, பத்திரிகைகளையோ இங்கு காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது. எல்லோரது எண்ணப் பாங்கும், அக்கறையும் ஈழப்பிரச்சினைகளையே அக்கறை காட்டி வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆரம்பத்தில் பத்திரிகைகள் முழுக்க முழுக்க இயக்கங்களின் ஐரோப்பிய கிளைகளாலேயே வெளியிடப்பட்டன. இவையே ஐ.த.சமூகத்தையும் கருத்தியல் ஆதிக்கம்செலுத்தி அமைப்புகளுள் பங்கு போடச் செய்தன. இதன் அடுத்த கட்டமான இன்றைய நிலைமைகளைப் பார்ப்பதற்கு முன், இந் நிலைமைகளுக்கு இலக்கியங்களை இட்டுச் சென்ற சமூகக் காரணிகளையும், அதன் மாற்று வடிவங்களையும் அவதானிப்போம்.

1977ஆம் ஆண்டுக்கு முற்பட்டதும் அதோடு ஒத்த அண்மைக்காலங்களினதும் எழுத்துகள் சீதன சீர்திருத்தமும், சாதி வேற்றுமைகளுமான தன்மைகளுள் அதீத காதல்கதைகள், தேர்தல் ஏமாற்றுகளைத் தழுவியே காணப்படுகின்றன.

1977ஆம் ஆண்டிலிருந்து 83ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இன முரண்பாடுகளையும், அதன் வெளித் தன்மையையும், இனக்கலவரங்களின் பாதிப்புகளையும் வெளிக்கொள்வதாக, அதையொட்டிய உணர்ச்சிகளைத் தூண்டுவதாக கலை இலக்கியங்கள் அமைந்தன.

83ஆம் ஆண்டுக்கு பிற்பட்டு 88ஆம் ஆண்டுவரை இன முரண்பாட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டின் அடிப்படையில் தமிழ்த் தேசிய வெறியை ஊட்டி, இழப்புகளுக்கு ஒப்பாரி வைத்து, இளைஞர்களை ஆயுதமேந்தும் உணர்விற்குள் தள்ளுவனவாகவிருந்தன.

88ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட தன்மைகள் (இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் பின்னர்) தமிழ்த் தேசியம், இன முரண்பாட்டு வெறிகள் கொஞ்சம் தளர்ந்த நிலையில் இந்திய எதிர்ப்புத் தன்மைகளைஉருவகப்படுத்தி பழைய மிச்ச சொச்சங்களுடன் புதிய மாற்றத்திற்குவருகின்றன என்பதை அவதானிக்க கூடியதாகவிருக்கின்றது.

இதே நேரத்தில் இன்னுமொரு மாற்றத்தையும் கவனிக்கலாம். 77ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் சமூக முரண்பாடுகளாக சீதன, சாதி வேற்றுமைகளை சமூகத்தை முன்னேக்கி நகர்த்தும் வகையில் இனம்காட்டி கலை, இலக்கியங்கள் உருவாக்கம் பெற்றன. 77 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலங்களில் அடிப்படை முரண்பாடுகளில் அக்கறை குறைந்து, இன முரண்பாட்டினடிப்படையில், தமிழ் இனத்தை ஒருஅமைப்புக்குள் கொண்டுவரும் வகையில், வர்க்க சமரசம் செய்யும் தன்மையில் முரண்பாடுகள் வெளிப்படுத்தப் பட்டன.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆயுதமேந்திய போராட்ட அமைப்புகளின் ஆதிக்கம், போராட்டத்திற்கு எல்லா வர்க்கத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் தன்மையுடன், முரண்பாடுகளை அமைப்பின் வளர்ச்சியையொத்த பிரச்சாரங்களாக கலை, இலக்கியங்கள் உருவாகக் காரணமாயிருந்தன.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது போராட்ட எழுச்சியோடு ஒத்த கால கட்டங்களில் வெளிவந்த வெளியீடுகள், சஞ்சிகைகள், ஆய்வுகள் அனைத்தும் ஈழத் தமிழரின் இலக்கியப் பயணத்தில் மிகவும் வேகத்துடன் முன்னேக்கிய கட்டமாகும்.

இந் நிலைமைகளின் முழுமையான பாதிப்புகள்தான் ஐ.த.சமூகத்தின் மத்தியிலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. இன்றும் கூட இந்தப் பாதிப்புகளிலிருந்து விடுவிப்பு ஏற்படவில்லை.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் போராட்டங்களின் திசைமாறலும், அமைப்புகளின் சிதைவுகளும் வரலாற்றை புதிய கட்டத்திற்கு .. நகர்த்துவதாக அமைகின்றபோது இயக்க வெளியீடுகள் பெரிதும் அற்றுப் போய், புதிய தன்மைகளுடன், புதிய தேடலுக்குள் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய உணர்வுடனும் சஞ்சிகைகள், வெளியீடுகள் சுயமாக ஐரோப்பிய தமிழர்கள் மத்தியில் தோன்றின.

குறிப்பாக சில சஞ்சிகைகளின் பெயர்களைக் கொண்டே பரவலான மக்களின் எண்ணப்பாங்கையும் அது இயக்க பிரச்சார இலக்கியங்களிலிருந்தும் ஓரளவு அந்நியப்பட்டு முரண்பாடுகளை மேலும் ஆய்வுநோ

www.tamilarangam.net

க்கூடனும் அமைவதை இலகுவாகக் கண்டுகொள்ளலாம்.

'அறவை', 'தூண்டில்', 'சிந்தனே', 'புதுமை', 'தேனி', 'சுவடுகள்' (நோர்வே), 'தேடல்' (பிரான்ஸ்), 'மானுடம்' (இத்தாலி), 'பார்வை' (கனடா).....

இப்படியான சஞ்சிகைகளின் எழுத்தாளர்கள் கவனமும், அக்கறையும் காட்டி நிற்கும் ஆக்கங்கள் எத்தகையனவாக இருக்கின்றன என்று பார்ப்பது முக்கியமான தேவையாகும்.

1) ஈழத் தொழிலாள வர்க்கத்தின் சுமைகளேயும், உணர்வுகளேயும் வெளிப்படுத்தி நிற்கும் உணர்வுப் படைப்புகள், ஆய்வுகள்.
2) சீதனம், சாதி, பெண்ணடிமை மற்றும் சமூக முரண்பாடுகளேச் சீர்திருத்தத் தன்மையுடன் அணுகும் படைப்புகள், வர்க்கப்போராட்டத்துடன் பிணேக்கும் படைப்புகள்.
3) இன்றைய ஈழத் தமிழர்களின் போராட்டங்கள், நாட்டின் அரசியல் நடவடிக்கைகளே தம் வர்க்க நலன் சார்ந்த அல்லது சில அமைப்புகளின் தாக்கங்களுடன் கூடிய செய்திவெளிப்பாடுகள்.
4) எம்மைவிட 50 வருடங்களுக்கும் மேலாக முன்னேக்கிச் சென்று கொண்டிருக்கும் ஐரோப்பிய இலக்கிய, அறிவியல் வளர்ச்சியில் இருந்து எமது சமூகத்திற்கு கற்றுக் கொடுக்கும், இனங்காட்டும் படைப்புகள்.

மேற்கூறியவை ஐ.த.சமூகத்தின் மத்தியில் இன்று வெளியாகும் சஞ்சிகைகளின் உள்ளடக்க வெளிப்பாடுகளாக இருக்கின்றன.

இங்கு வாழும் தமிழ் மக்களின் முரண்பாடுகள் பற்றி ஆய்வு செய்து எழுதுவதோ, அதன் தாக்கங்களோ குறைவாகத்தான் தென்படுகின்றன. குறிப்பாக சிறுகதைகளே எடுத்துக் கொண்டால் அதன் தளமும், கதையோட்டமும் இலங்கையாகவே இருக்கும். கவிதைகளும் கூட பெரும்பாலும் இலங்கை மக்களின் வாழ்வியல் தன்மைகளாகவே இருக்கின்றன. கட்டுரைகள் எனும் போது அரசியல் அமைப்புகளின் நடவடிக்கைகளோடு ஒத்த தன்மையாகவே பெரிதும் தெரிகின்றன. ஆசிரியர் தலேயங்கங்களே ஆய்வு செய்யும் போதும் இத் தன்மைகளே அவதானிக்க முடியும். ஆயினும் இப்படியான தன்மைகளிலிருந்து விடுபட்ட சில சஞ்சிகைகளேக் காணக் கூடியதாயிருப்பதும் நல்ல அம்சமாகும்.

ஒரு எழுத்தாளர் எழுத்தை ஆள்கிறுர் என்போம். எழுத்தை நயமாக ஆளத் தெரிந்தவர்கள் எல்லோரும் எழுத்தாளர்கள் தானு என்ற கேள்வி எழுகிறபோது இதற்கு விடை காண முற்படுவது மேற்குறிப்பிடும் ஆய்விற்கு ஒரு பாலமாக அமையும். ஒரு ஆரோக்கியமான எழுத்தாளர் எல்லோருடைய பிரச்சினேகளேயும் தன்னுடைய பிரச்சினேயாகவும், தன்னுடைய பிரச்சினேயை எல்லோருடைய பிரச்சினேயாகவும் காண்கிறுர். ஒவ்வொரு முரன்பாடுகளாலும் அவர் ஆட்கொள்ளப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படும்போது அவர் அந்த முரன்பாடுகளுக்குத் தீர்வைத் தேட முயல்கிறார். அந்த முயற்சி அந்தச் சூழலுடன் ஒத்துப்போகவியலாத தன்மையிலுள், அந்த முரன்பாடுகளை சமூகத்திற்கு இனம்காட்டி எல்லோரது கவனங்களையும் அந்த முரன்பாட்டின் மேல் பதிக்க முற்படுகிறான். அல்லது முரன்பாடுகளுக்கான தீர்வை இனங்காட்டி அதன்வழியில் சமூகத்தை நகர்த்த முற்படுகிறார்.

ஒரு சமூகத்தை எவர் பூரணமான தன்மையுடன் ஆய்வு செய்கின்றாரோ அவர்தான் ஆரோக்கியமாக, சமூகத்தை முன்னோக்கி இழுத்துச் செல்லும் எழுத்தாளராக இருக்க முடியும். ஒரு சிறந்த எழுத்தாளரை மேற்குறிப்பிட்ட தன்மைகளின் அடிப்படையின் கீழ்தான் இனம் காணமுடியும்.

ஐ.த.சமூகத்தில், நிலப்பிரபுத்துவ கருத்தியல்களை அப்படியே காப்பாற்றிவருபவர்களும், முரன்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாமல், சமூக அமைப்பு முறை மாற்றமடையாத வகையில் முரன்பாடுகளை சீர்திருத்தவாத கண்ணோட்டத்தில் வெளிப்படுத்துபவர்களுமான எழுத்தாளர்களே பலர் இருப்பதால் ஒரு முழுமையான எழுத்தாளரை இனம் காண்பது கஉஷ்டமான காரியம்தான்.

ஒரு எழுத்தாளரின் தன்மைகளையும், சமூகத்துடன் அவர் கொண்டிருக்கும் உறவுகளையும் மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் காண முற்படும்போது, இன்றைய ஐ.த.சமூகத்தின் மத்தியில் எழுதும் எழுத்தாளர்களின் பங்கு எத்தகையதாக இருக்கிறது என்பதை உணர முடியும்.

ஒரு எழுத்தாளர் யாரைப்பற்றி? யாருக்கு? ஏன்? எழுதுகிறார் என்பது மிகவும் முக்கியமானதொன்று. மலையக மக்களின் அன்றாட வாழ்வின் வெளிப்பாடுகளையும், மற்றும்பாட்டாளி, தொழிலாள மக்களின் முரண்பாடுகளையும் ஒரு எழுத்தாளர் கையாளும்போது, அதை அம் மக்களுக்கு இனம்காட்டி விழிப்படையச் செய்வதுடன், சுமைகளிலிருந்து விடுபட அவர்களை அமைப்பாக்க முற்படுவார். அதைவிடுத்து அவர்களின் உணர்வுகளையும், அதன் அடிப்படைத் தன்மைகளையும் அவர்கள் பெறமுடியாத மத்தியதர, உயர்தர வாழ் மக்கள் மத்தியிலோ அன்றி உண்மையான வர்க்கத்திற்கு உழைக்க முடியாத ஐ.த.சமூகத்தின் மத்தியிலோ வெளிப்படுத்தும்போது அது மக்களுக்கு எதுவித பிரயோசனமுமற்ற ஒப்பாரி வைக்கும் தன்மையாகவும், அவர்களின் உணர்வுகளையும், முரன்பாடுகளையும் விற்பனை செய்வதாகவும் அமைந்து விடுகின்றது. இந்த விற்பனை மூலம் அந்த எழுத்தாளரின் பெயர்தான் நாலு பேருக்குத் தெரிய வருகிறதே ஒழிய வேறெந்த பிரயோசனமும் இருப்பதில்லை.

(தொடர்ச்சி 31ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய சுவடுகள்

மகளே
நீ வெளியே போகாதே
படிக்காதே
தொழில் செய்யாதே என்று
நான் உன்னைக் கண்டிக்கமாட்டேன்

எப்போதும் உனக்கு
நான் காவலாக இருக்கமாட்டேன்
ஏன் தெரியுமா?
நான் அப்படியிருந்தால்
நீ எப்போதும் சிந்திக்கமாட்டாய்
என்னிடம்தான் எதிர்பார்ப்பாய்
கேட்பாய்

நீ
இந்த பரந்து விரிந்த
உலகத்தில் யாவற்றைப்பற்றியும்
நன்றாக அறிந்துகொள்
அதற்கேற்ப நீ நடந்துகொள்
எதற்கும் எவருக்கும்
பயம் கொள்ளாதே.

நீ
அடக்கப்பட்டவள்
ஒடுக்கப்பட்டவள் என்று
பெரிதாக சத்தம்போட்டு
அனுதாபப்படுபவர்களை
ஆழமாக நோக்கு
அவர்களிடம் எதையும் எதிர்பார்க்காதே.

(தொடர்ச்சி 18ஆம் பக்கத்தில்)

www.tamilarangam.net

# மாக்ஸியம் வேண்டாம்... ?

## லோகநாதன்

தம்முடைய கருத்துகள் நேரானவை எனத் தெரிந்து கொண்டும், இப்படியான குருவானவர்கள் முன்வெளியிடுவதற்கு ஒஞ்சித்து நிற்பதான ஒரு தாழ்வு மனப்பாங்கை வளர்த்துக் கொள்வதும்... போன்ற இந்த நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கும், தடுப்பதற்கு எனச் செயற்படவும் மறந்து சர்வதேச அரசியலையும், எமது பிரச்சினைகளையும் பொதுவுடமைக் கண்ணோட்டத்தில்பார்க்கிறோம் என்று பேசுவது துரோகமானதாகவே கருதப்படவேண்டியுள்ளது.

தவறான விளக்கம் காரணமாக, இறுக்கமான சக்திகளான எம்மவர்களில் ஒரு பகுதியினரையே எதிரிகளாக்கிவிட்டு, அது பாதிப்பில்லை எனப் பாராமுகமாக இருந்துகொண்டு 'டிராட்ஸ்கி'யையும், 'ஸ்ராலினை'யும் பேதங்கண்டு பிரச்சாரம் செய்வதில் உள்ள முக்கியத்துவக் குறைவு என்றே கருத வேண்டியுள்ளது.

பண்டிதத் தமிழில் 'பௌதிகமும்', பார்ப்பனத் தமிழில் 'மார்க்சியமும்' பாதிப்புக்குள்ளானதை மறுப்பதற்கில்லை.

அன்றாடம் அடுப்பூதும் 'ஊருத்தி', நீர் இறைக்கும் 'கப்பி'

விரும்ப வேண்டியவர்கள் அல்லது எங்களுடையது என்று உரிமை பாராட்ட வேண்டியவர்கள் அதாவது அறிவாளர்களின் வார்த்தையில் சொல்வதானால் "உழைக்கும் வர்க்கத்துக்குள்"ளேயே ஒரு சிலர்பொதுவுடமை 'பொல்லாதது' என்றும் அதன் வளர்ச்சியை 'எதிர்க்க'வேண்டும் என்றும் அபிப்பிராயமுடையவர்களாகவுள்ளனர்.

இதேபோல 'பொதுவுடமை' யின்பால் ஏன் குறைந்தபட்சம் மனிதாபிமானத்தின்பால் கவரப்பட்டு, தன்னைப் பொதுநலத்தினூடே ஈடுபடுத்திக்கொள்ளவும், அதுபற்றிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அறிவை வளர்த்துக் கொள்ளல் என்ற தேடுதலில் இறங்கிவரும் அதிகமானஇளைஞர்கள் கூட 'பொதுவுடமைக்' கொள்கை கடினமானது எனவே கருதுகிறார்கள்.

'பொதுவுடமை' தொடர்பான சில வார்த்தைகளை விளங்கிக்கொள்ள முடியாமல், இவைகளைப் பேசுபவர்கள் ஏதோ அதிகம் கற்றுவிட்டவர்கள் என எண்ணி ஒருஇடைவெளியை ஏற்படுத்திக்கொண்டு குரு—சீட அமைப்பு முறையிற்கூடப் பார்க்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சைக்கின் 'பம்பி' போன்ற சர்வ சாதாரணமான உதாரணங்களேமா னவர்களுக்கு விளங்க வைப்பதற்கா க எழுதப்பட்ட பாடப்புத்தகத்தை மொழிபெயர்ப்புச் செய்த பண்டித ரொருவர் 'நெம்புகோல்', 'முச லம்', 'விதானம்' என்பதுபோல் பாவனையில்லாத பாரமானசொ ற்களைப் போட்டு, உதாரணங்களின் எளிமையைக் கெடுத்து, விஞ்ஞானத் தையே 'வேம்பாக்கி'விட்டதுபோ ன்ற உதாரணம்தான் இன்று 'மார் க்சிய' தத்துவத்திற்கும் ஏற்பட்டிரு க்கிறது.

பொதுவுடமைத் தத்துவம்வா னத்திலிருந்து அசரீரி அருளிச் செய் ய, மார்க்ஸ் எழுதியதல்ல. மக்கள் சமூகத்தின் கடந்தகால, நிகழ்கால எதிர்கால நடவடிக்கைகள், வாழ்க் கைமுறைகளை நெறிப்படுத்தி முன் வைத்த தத்துவம். சமூகத்திற்குஇதன் தேவை இருந்தது. அதனால் இது பிற ந்தது. இது 'கார்ல் மார்க்ஸ்'இல் லாமல் இன்னொருவர் மூலமாகவேனு ம் பிறந்தே இருக்கும்.

இவ்வாறு மக்கள் நடவடிக் கைகளை தொகுத்ததை, மக்களே விளங்கிக்கொள்ள முடியவில்லையென் றால், விளங்கவைக்கும் முறையில் அல் லது மொழியில் அல்லாவா தவறிரு க்க வேண்டும்?

ஆம்! இந்த இரண்டுமே இன் று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிகழ்ந்திருக்கின்றன.

சோவியத் மொழிகளிலும், சீன, ஆங்கில மொழிகள் மூலமாகவு ம் வெளிவந்த 'பொதுவுடமை'சா ர்பான நூல்களையும், தத்துவ விள க்கங்களையும் மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டிருந்த பண்டிதர்களும், பார் ப்பன பண்டிதர்களும் விடயத்தின்மீது அறவே பற்றுவைக்காமல், வித்துவத் தன்மையில் வைத்த பற்றுக் காரண மாகவே இன்று 'மார்க்சிய'த்தத் துவத்தில் மலிந்துள்ள கடினச் சொ ற்கள் பிரசவித்துள்ளன.

ஒன்றை விளங்க வைப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் வ ரக்கூடாது என்பதிற் செலுத்தப்படு ம் கவனத்தைவிட, இந்த விடயத்தை இலகுவாக விளங்க வைத்தோமா என்று பார்ப்பதிலேயே விடயத்தி ன் வெற்றி உள்ளது என்பதை இவர் கள் மறந்துவிட்டனர்.

இதுபோலவே இன்று ஈழப் போராட்டத்தில் விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய அத்தனை இயக்க ங்களும் மார்க்சியம் பற்றி விளங்க வைத்தமுறை தவறானது எனும் குற்ற ச்சாட்டில் அல்லது வரலாற்றுத் து ரோகத்தில் இடம்பெறுகின்றனர். வி டுதலைப் புலிகள் 'பொதுவுடமை' பற்றிப் பேசவே இல்லை!

இயக்கங்களுக்கு அலைஅலை யாகத் திரண்ட இளைஞர்கள் மத்தி யில் அரசியல் வகுப்புகளை நடாத் துவதற்கு ஆங்காங்கே நியமிக்கப்ப ட்டோரின் தகுதிகள் — உரத்துப் பொய் சொல்லல், எப்படியாவதுச மாளித்தல், ஏனைய இயக்கங்களைச் சாடுதல், எல்லாம் தெரிந்தவர் போன்ற பிரமையை ஏற்படுத்துதல்

www.tamilarangam.net

.... இன்ன பிறவாக இருந்தனவே தவிர, இவர்களில் யாரேனும் மக்கள் மத்தியில் கற்றுக் கொண்டதோடு, தத்துவங்களை அவ்வப் பிரச்சனைகளுக்கேற்ப பகுத்தாய்ந்து கொடுத்து, 'மக்கள் போராளிகள்' ஆக அவர்களை மாற்றும் தகுதியுடனிருந்தார்களா என்பது கேள்விக்குறியே.

'மார்ச்சியம்' என்பது இருப்பவனிடம் வழிப்பறி செய்வது என்கிற வியக்கத்தை மட்டும் உடையவர்களாக இயக்கங்களில் போராளிகள் இருப்பதும், இருந்ததுவும் எம்மால் காணமுடிந்தவை.

இவைகளை மனதிற் கொண்டு பழகு தமிழின் பதங்களோடு, பலருக்குப் புரியும் வகையில், அடிப்படைப் பொதுவுடமைக் கருத்துகளையும், நடைமுறை விடயங்களைப்பற்றிப் பொதுவுடமைப் பார்வையுடனும் கேள்வி - பதில் வடிவத்தில் கொடுக்கவுள்ள ஒரு புதிய பகுதியை அடுத்த கலத்திலிருந்து ஆரம்பிக்கின்றோம்.

இதன் நடைமுறை வெற்றியை உங்கள் கேள்விகளும், விமர்சனங்களும், இப்பகுதியின் பயன்பாடுமே தீர்மானிக்கும். கேள்விகளைத் தூண்டில் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

---

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதோ
வேலிக்கு வெளியே
என்ன நடக்கிறது என்று
பிய்ந்துபோன கிடுகுவழியே
வெளியே பார்க்கும்
அவர்களையும் உன்னைப்போல்
சிந்திக்கச் செய்.

இருளிற்குள் இருக்கும் அவர்களை
வெளிச்சத்திற்கு கூட்டிவா.
பாவம் அவர்கள்,
இருளையே பார்த்துப் பழகியதில்
வெளிச்சம்
அவர்கள் கண்களுக்கு கூச்சமாக இருக்கும்
பழகும்வரை
துணையாக இரு.


ஆம் மகளே
இவை
நான் நடந்துவந்த
பாதையில்
பாதங்களின் கீறலோடு
உனக்காக
அழுத்தி வைக்கும்
புதிய சுவடுகள்.

-கல்யாணி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.07.89 (வீரகேசரி)

திருகோணமலையிலிருந்து கொழும்பை நோக்கி வந்த தனியார் மினிபஸ்மீது கம்பளை பகுதியில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 6 பயணிகள் காயமடைந்தனர்.

நிவித்திகல பொலிஸ் பகுதியில் 4 வீடுகளுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் லயனல் பெர்னாண்டோ, முகம்மது கம்சா, தங்கநாதன், தங்கதுரை ஆகியோரை வெளியே கூட்டிச் சென்று சுட்டுக் கொன்றனர்.

வில்பிற்ற தேயிலைத் தொழிற்சாலையை புனரமைப்பதற்காக உலகவங்கியின் உதவி கிடைக்காது போனதால்மாத்தறை மாவட்டத்திலுள்ள 2 தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இதனால் 750 ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர்.

03.07.89 (வீரகேசரி)

தோணிக்கல் கிராமத்தில் ஏற்பட்ட மோதலில் சிவப்பியம்மா என்பவர்பலியானார். இவரது உறவினர்களும், வேறு பலரும் காயமடைந்தனர்.

9 கோரிக்கைகளை முன்வைத்து போராடப் போவதாக ரயில்வே போராட்ட முன்னணி அறிவித்துள்ளது.

கேகாலை மாவட்டதில் தேசப்பிரேமி இயக்கத்தினரால் 6 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

05.07.89 (வீரகேசரி)

"எம்மைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் உலகில் எந்த ஒரு சக்திக்கும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உலகின் எல்லா நாடுகளிலும் அமைப்புகள் இருக்கின்றன. அந்த அமைப்புகளின் வாயிலாக அவர்களுக்கு நிதியுதவிகள் கிடைக்கின்றன இலங்கை அரசாங்கத்திற்கெதிராகவோ, நாட்டின் எப்பகுதியிலுமுள்ள மக்களுக்கு எதிராகவோபோர் நடவடிக்கைகளில் இறங்க மாட்டோமென தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நாடறிய வாக்குறுதி அளித்துள்ளார்கள்" — பிரேமதாச

தோட்டப்பகுதிகளில் இனந்தெரியாதநபர்களினால் அடையாள அட்டைகள் அபகரிக்கப்படுகின்றன.

இலுப்பைக்குளம் கிராமத்தில் செல் விழுந்து வெடித்ததில் பரமேஸ்வரி என்பவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ரகு என்பவர் கொழும்பு மோதரை வீதியில் 4 இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுகவீனமுற்ற நிலையில் சிறுவன் ஒருவனைப் பெற்றோர்கள் சிகிச்சைக்காகத் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மருத்துவரின் வரவுக்காக பலமணிநேரம் காத்திருந்த பெ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்ருேரிடம் இறுதியாக "நீங்கள் எமது வாடிக்கையாளர்களல்ல" என்று கூறி சிகிச்சை மறுக்கப்பட்டதாம். இதனல் ஏமாற்றமடைந்த பெற்ருேர் சிறுவனையும் அழைத்துக் கொண்டு கண்ணீருடன்வெளியேறினர்.

யாழ் மாவட்டத்தில் போதைவஸ்துப் பாவனை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

'பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் எந்தவித முன்னறிவித்தலுமின்றி பல்கலைக்கழகத்திஜள் செல்ல அமைச்சரவை அனுமதி வழங்க இருப்பதாக உயர்கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். இந்தத் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டு, பல்கலைக்கழக மாணவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் உயர்கல்வி அமைச்சு உத்தரவாதம் வழங்கும் வரை மாணவர்கள் எல்லாப் பரீட்சைகளையும் பகிஉஷ்கரிப்பார்கள். இதுவரை 84 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 64 மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். 160 மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்' — அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

06.07.89 (வீரகேசரி)

சம்பளமற்ற, கட்டாய விடுமுறையிலிருக்கும் அல்லது சேவையிலிருந்து கலைக்கப்பட்ட இராணுவம், கடற்படை, விமானப்படைகளைச் சேர்ந்த சகல தொண்டர்படைகளைச் சேர்ந்தவர்களும் உடனடியாக சமீபத்திலிருக்கும் சம்பந்தப்பட்ட படைப்பிரிவுகள் அல்லது பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களை வேலைக்குச் செல்ல வேண்டாமெனக் கோரும் கடிதங்கள் கலபொக்க, மருகல்ல, உட்பட சுமார் 10 தோட்டப்பகுதிகளுக்கு தீவிரவாத இயக்கமொன்றினல் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வேலைக்குப் போகாதிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு இணைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு 1990ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதிவரை பிற்போடப்பட்டுள்ளது.

வவுனியா, உடப்பு கிராமங்களிலிருந்து சுமார் 72 குடும்பங்கள் வவுனியா நகரில் தஞ்சமடைந்துள்ளன. இவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தொண்டர்படையில் இணைந்துள்ளதால் இவர்கள் தங்களிடங்களிலிருந்து விரட்டப்பட்டுள்ளார்கள்.

07.07.89 (திசை)

ஜே.வி.பி.யின் பயமுறுத்தல் காரணமாக கொற்றேல்களில் தங்கியிருந்த இந்திய வம்சாவழியைச் சேர்ந்தோரை சந்திக்க அமைதிப்படைக்குப் பொறுப்பான கல்கட் போனபோது, இலங்கை இராணுவப்படையைச் சேர்ந்தவர்கள் அவரை வரவேற்றுச் சென்றனர். அப்போது சற்றுத் தள்ளி அவதியுறும்நிலையில் நின்றுகொண்டிருந்த இரு இலங்கையரை ஒரு இலங்கை இராணுவ அதிகாரி கண்டு அவர்களிடம் சென்றபோது, அவர்கள் தங்களால் தேடப்படும் தமிழ்த்தீவிரவாதக் குழுவொன்றைச்சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது. உடனே அவ்விருவரையும் கைது செய்ய முயன்றபோது, அங்கு விரைந்துவந்த இந்திய இராணுவ அதிகாரிகள் "இவர்கள் இந்திய உளவு ஸ்தாபனத்தைச்

சேர்ந்தவர்கள்" என்று கூறி விடுதலை செய்தனர்.

தமிழ் அகதிகள் என்ற பேரில் 9,000 இந்தியர்கள் திருமலை மாவட்டத்தில் குடியேற்றப்பட்டு வருவதாகவும், இது கிழக்கிலிருந்து சிங்களவர்களையும், முஸ்லீம்களையும் துரத்தும் நடவடிக்கையே என்று ஜே.வி.பி.யின் இரகசிய வானொலியில் ரோகணவிஜேவீர பேசியுள்ளார்.

தமிழீழப் பிரகடனத்தை யாராவதுசெய்தால் அவர்கள்மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

07.07.89 (வீரகேசரி)

தற்போது சட்ட விரோதமாக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவோர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படுவர். தொழிற்சங்கக் கூட்டங்களுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வேலைக்குச் செல்வோரை பயமுறுத்துவோர், வேலைக்குச் செல்லக்கூடாது என அவர்களைத் தூண்டுவோரை கண்ட இடத்தில் சுட பாதுகாப்பு படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சுவரொட்டிகள் ஒட்டுவோர், துண்டுப்பிரசுரங்கள், அச்சுறுத்தல் கடிதங்கள்வெளியிடுவோர், விநியோகிப்போர் கண்ட இடத்தில் சுடப்படுவர்.

உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையொன்றில் உலகிலேயே பீடைகொல்லிகளின் நஞ்சாக்கல் மூலம் வருடாந்தம் இறக்கும் மக்கள் தொகையில் இலங்கை முதலிடம் வகிக்கிறதென்றதகவலைத் தெரிவித்துள்ளது. இலங்கையில் வருடந்தோறும் 13,000பேர் கிருமிநாசினி நஞ்சாக்கலுக்கு உட்படுவதாகவும், இவர்களில் சுமார் 1,000பேர் இறந்துவிடுவதாகவும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

08.07.89 (ஐலண்ட்)

ஜனாபதியால் மட்டுமே ஊரடங்குச்சட்டம் கொண்டுவரப்படும். மற்றவர்களால்கொண்டுவரப்படும் ஊரடங்குச்சட்டம் செல்லாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

09.07.89 (சன்டே ஒப்சேவர்)

ஜே.ஆர் விரும்பினால்தான் இந்தியப்படைகள் வெளியேறும் — தீக்சித்

பொந்தபிள்ளையின் 18வயது மகன் சந்தைக்குப் போனபின் திரும்பி வரவில்லை. இதனால் தந்தையார் இந்திய இராணுவ முகாமுக்கு வந்து முறையிட்டார். "அவன் எனது ஒரே மகன். அஸ்மா நோயாளி. தயவு செய்து அவனைக் கண்டுபிடித்துத் தாருங்கள்" என்று கெஞ்சினார். அவரிடம் பல படிவங்களைக் கொடுத்து நிரப்பச் சொன்ன அதிகாரி 10நாட்களுக்குப் பிறகு திரும்பவும் தன்னை வந்து சந்திக்கச் சொன்னார். பொந்தபிள்ளை அந்தஇடத்தைவிட்டுப் போனதும் என்னிடம் அந்த அதிகாரி "இது ஒரு தந்திரம். இவரின் மகனைக் கட்டிச் சென்றது ஈ.பி.ஆர்.எல்.எவ்தான். எங்களால் அவரது மகனைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் நாங்கள் அப்படிச் செய்ய முடியாது. தந்தையார் தொடர்ந்து இங்கே வருவார். நாங்களும் அவரைத் திரும்பவும் வரச் சொல்லுவோம். எங்களுக்கிடப்பட்ட உத்தரவுகள் இப்படி" என்று சொன்னார்.

www.tamilarangam.net

காணாமற் போனவர்கள் பற்றிய 6க்கு மேற்பட்ட பைல்கள் மேசையில்கிடக்கின்றன. செங்கோடன், கேதீஸ்வரன், உதயகுமாரன், பாலநாதன், கிருஉக்ணமுருகன், வித்யாகரன்.... என்று பட்டியல் நீளுகிறது. பிறேமானந்தனின் தாயார் புத்தூரிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய இராணுவ முகாமுக்கு 4 மாதங்களாக ஒவ்வொரு கிழமையும் வந்து போகிறார். "ஒவ்வொருமுறையும் அடுத்த கிழமைவரும்படி சொல்கிறார்கள்" என்று இவர் சொன்னார்.

யாழ்நகர் முழுவதிலுமிருந்தும் ஆயுதந்தரித்தவர்களால் இளைஞர்களால் பிடிக்கப்பட்டு வான்களில் ஏற்றப்பட்டுகொண்டு செல்லப்படுகிறார்கள். ஒருவரும் இதற்கு எதுவும் செய்ய முடியாது. மக்கள்தொண்டர்படைக்காக கொண்டுவரப்படும் இவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினால் புலிகளுக்கெதிரான படையாக அமைக்கப்படுகிறார்கள்.

ஒருநாள் மத்தியானம் 2மணியளவில் யாழ்நகரின் மத்தியில் றொயோற்றுவான் ஒன்று வந்து நிற்கிறது. பின்கதவு திறக்கப்பட 6பேர் இறங்கினார்கள். உடனே போக்குவரத்து நிறுத்தப்படுகிறது. ஒரு காரிலிருந்து 2 இளைஞர்கள் வெளியே இழுத்தெடுக்கப்பட்டு வானுக்கருகே நிறுத்தப்படுகிறார்கள். ஒரு குழு வாகனங்களுக்குள் வேறு இளைஞர்கள் இருக்கிறார்களா என்று தேட

ஆயுதம் தாங்கிய இருவர் என்னிடம்வந்து வாகனத்தைவிட்டு இறங்கச் சொன்னார்கள். "இந்தியர்" என எனது ரக்ஸிசாரதி சொல்ல, நானும் பாஸ்போட்டைக்காட்ட "இந்தியரா?" என்றவர்கள் என்னுடன் கைகுலுக்கிச் சிரித்தார்கள். பின்னர் அவர்கள் எனது ரக்ஸிக்குப் பின்னால் போய் இன்னும் 2 இளைஞர்களை

சேட்டுக் கொலரில் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார்கள். ஒருவர் தயக்கமாக தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சிக்க, அவரின் அடிவயிற்றில் துப்பாக்கிப் பின்பிடியால் பலத்த அடி விழுகிறது. 10 நிமிடங்களுக்குள் ஈ.பி.ஆர்.எல்எவ்வினர் இப்படியாக 7 இளைஞர்களைப் பிடித்துக்கட்டி தங்கள் வானுக்குள் போட்டுக் கொண்டு போகிறார்கள். "இப்படி ஒவ்வொரு நாளும் இளைஞர்கள் கடத்தப்படுகிறார்கள்" என்று யாழ் உதவி பாதிரியார் மைக்கல்சுவாமி சொன்னார். "நாளை நாங்கள் எல்.ரி.ரி.ஈக்கோ, இலங்கை அரசாங்கத்திற்கோ முகம் கொடுக்க நேரிடலாம். அதனால்தான் இப்படி புதிதுபுதிதாக ஆட்களைச் சேர்க்கிறோம்" என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த ராஜன் கூறினார்.

ஈழத்திற்கான 'புளுபிரிண்டை' இந்திய இராணுவம் மக்கள் தொண்டர்படையுடன் இணைந்து தயாரிக்கும் அதே நேரம் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இன்னொரு ஆயுதப்பிரிவான 'மேலதிக மக்கள் தொண்டர் படைக்கு' இந்திய உளவுப்படையான 'றோ'வினாலும், இந்திய இராணுவத்தினாலும் பயிற்சியளிக்கப்படுகிறது. — டெலிகிராப் நிருபர்

09.07.89 (ஐலண்ட்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொதுசன ஊழியர்கள் சனியும், ஞாயிறும் ஆயுதப் பயிற்சிக்கு வரவேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் ஆகியவற்றினால் கேட்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தாமாக வராவிட்டால் பலவந்தமாகக் கொண்டு செல்லப்படுவார்களென்று ஈ.என்.டி.எல்.எவ் எச்சரித்துள்ளது. நேற்று மட்டக்களப்பு கச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேரி அதிகாரிகள், நகரசபை ஊழியர்கள் ஆயுதப்பயிற்சிக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

09.07.89 (வீரகேசரி)

ஈரோஸ் தலைவர்களான சங்கர்ராஜி, பரராஜசிங்கம், ரட்ணராஜா ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து தாம் பாராளுமன்றம் செல்ல உள்ள முடிவை அறிவித்தனர். தமக்கு உறுதியளித்தபடிதாம் பாராளுமன்றம் செல்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியதற்காக ஜனாதிபதியை அவர்கள் பாராட்டினார்கள்.

10.07.89 (வீரகேசரி)

இன்றிலிருந்து கடமைக்குச் சமூகமளிக்கத்தவறும் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் சம்பளம் இழப்பரென பொதுநிர்வாக அமைச்சர் அறிவித்துள்ளார்.

பிரபல நாட்டுக்கூத்து முன்னோடிகளில் ஒருவரான நடிகமணி வி.வி.வைரமுத்து கொழும்பில் காலமானார்.

11.07.89 (திசை)

அச்சுவேலியில் 42வயதுப் பெண் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

அச்செழுவில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் 20வயது இளைஞர் இறந்துகிடந்தார்.

வியாபாரிமூலையில் நடந்த அசம்பாவிதத்தில் 6பொதுமக்கள் பலியாகினர்.

12.07.89 (வீரகேசரி)

வடக்கு, கிழக்கில் தோன்றியுள்ள சூழ்நிலையால் அங்கிருந்து வெளியேறி கொழும்புக்கு வந்துசேரும் வாலிபர்கள் தங்கியிருப்பதற்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இங்கும் தங்கும் வாலிபர்களது பாதுகாப்பு மற்றும் உணவு விடயங்களை அரசாங்கமே கவனிக்கும்.

12.07.89 (திசை)

ருவன்வெலவில் தொடர்ந்து பெய்தமழையினால் ஏற்பட்ட மண்சரிவில் 15 பேர் மாண்டனர்.

தென்பகுதியில் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அப் பல்கலைக்கழகங்களை இராணுவம் சுற்றிவளைத்துள்ளது.

13.07.89 (திசை)

கொழும்பு புல்லர்ஸ் வீதியிலுள்ள வீட்டில்வைத்து ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் சுட்டதில் த.வி.கூவைச் சேர்ந்த அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் இறந்தனர். சிவசிதம்பரம் காயமடைந்தார்.

12.07.89 (டெய்லிநியூஸ்)

"நாங்கள் இலங்கை இராணுவத்துடன் சமாதானமாக இருக்கிறோம். இலங்கையிலிருந்து இந்தியா இராணுவத்தை திருப்பியழைக்கவில்லையாயின் எல்.ரி.ரி.ஈ பிரேமதாசவுக்கு உறுதுணையாக இருக்கும்" -அன்ரன்பாலசிங்கம். கொழும்பில் எல்.ரி.ரி.ஈ பிரதிநிதிகள் தங்கியிருக்கும் ஆடம்பர கொற்றேயுக்கு முன்னர் இவர்களுடன் சண்டையிட்ட எஸ்.

ரி.எப் எனப்படும் விசேட அதிரடிப்படையினரே பாதுகாப்பு வழங்குகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான் வேண்டாவெறுப்பாகவே உங்களுடன் கதைக்கிறேன். ஏனென்றால் அப்படியானதொரு விரோதச் சூழலை நாங்கள் இங்கே அமைத்திருக்கிறோம். நீங்கள் சொல்வது ஏதாவது ஒரு குழுவுக்கு ஆத்திரத்தை மூட்டினால் பலர் கொல்லப்படுவார்கள். வெறுப்பூட்டுகிற பல தலைவர்களை நாங்கள் வைத்திருக்கிறோம்" என்று 'உதயன்' தினசரிப் பத்திரிகையின் ஆசிரியரான எஸ். மயில்வாகனநாதன் கூறினார். இவர் இன்னொரு பத்திரிகையான 'முரசொலி'க்கு நடந்ததகதியை அனுபவமாக வைத்துள்ளார். ஈ.பி.ஆர்.எல்.எவ் எப்படிப் பலவந்தமாக தனது படைகளுக்கு ஆட்களைத் திரட்டுகிறது என எழுதியமையால் முரசொலி ஆசிரியர் திருச்செல்வத்தின் மகன் அகிலன் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினால் சுட்டுக் கொல்லப்பட்டார். முரசொலி தடைசெய்யப்பட்டது. திருச்செல்வம் கனடாவுக்குத் தப்பிப் போய்விட்டார். "ஈ.பி.ஆர்.எல்.எவ், எல்.ரி.ரி.ஈ, ஈ.என்.டி.எல்.எவ், ஐ.பி.கே.எவ் என்று ஏகப்பட்ட ஆயுதங்களுக்கு நாங்கள் அடிமையாக இருக்கிறோம். சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை எங்களால் பார்க்க முடிகிறது. ஆனால் அவற்றையெல்லாம் எழுத முடியாது. அரசியல் பற்றி எனக்குப் பலவிதமான கருத்துகள் இருக்கின்றன. ஆனால் நான் ஆசிரியர் தலையங்கமாக எழுதுவதோ இலேசான விசயங்களைப் பற்றித்தான். உதாரணமாக மீனைப் பற்றி. அடிமைகள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவோ, தேர்வுகளை வைத்திருக்கவோ முடியாது" என்று மயில்வாகனநாதன்சொன்னார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வை யாரும் விரும்பவில்லை. ஏனெனில் நல்லதொரு அரசாங்கமாக இருப்பதிற்குப் பதில் தங்கள் நிலையை உயர்த்துவதையே ஒரே ஒரு குறிக்கோளாக வைத்து இயங்குகிறார்கள். ஐ.பி.கே.எவ்வையும் யாரும் விரும்பவில்லை. ஏனெனில் அது சமாதானத்தை ஏற்படுத்தாததுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு ஆதரவாக இருக்கிறது. எதிர்காலம் மிக கெட்டதாகவே இருக்கிறது. இப்போது மட்டுமென்ன சிறப்பாகவா இருக்கிறது? எங்களுக்கு அமைதி இருக்கிறதா? எங்களுக்கென்று அரசாங்கம் இருக்கிறதா? நாங்கள் வைத்திருப்பதெல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எவ், இராணுவம் போன்ற கொலைக் கும்பல்களைத்தான் என்று இங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். —சங்கர்ஷன் தாகூர் (இந்திய நிருபர்)

"ஜூலை 29க்குப்பின் இலங்கைப்படைகள் வடக்கு, கிழக்கைப் பொறுப்பேற்கும். தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் எல்.ரி.ரி.ஈ.தான் என்பதை அரசாங்கம் ஏற்கவில்லை"— ரஞ்சன்விஜேரத்ன

"ஜே.வி.பி.யினருடன் நாங்கள்தொடர்புகள் வைத்திருக்கிறோம். சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு ஜே.வி.பியில் ஒவ்வொருவருடனும் நாங்கள் பேசுவோம்" —பத்மநாபா

14.07.89 (திசை)

இந்தியாவோடு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் சம்மதித்திருப்பதாகவும், இந்திய அரசு அதை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படும் செய்திகளிலிருந்து விரைவில் இருபகுதியினருக்குமிடையே யுத்த நிறுத்தம் ஏற்படலாமென தெரியவருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

15.07.89 (திசை)

ஊர்காவற்துறை கரம்பன் சந்தியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.ஒரு குழுவைச் சேர்ந்த இருவர்கொல்லப்பட்டனர்.

திருநெல்வேலி சிவன்கோவில் பகுதியில் வைத்து ஈரோஸ் உறுப்பினரொருவர்சுட்டுக் கொல்லப்பட்டார்.

19.07.89 (வீரகேசரி)

புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் கொலை செய்யப்பட்டார்.இவரின் சடலம் பம்பலப்பிட்டி பிரேங்பேட்பிளேஸ் பக்கமாகக் கடற்கரையில் கிடந்தது.

கோதுமையின் விலை கிலோ 50சதத்தாலும், பாண் 20சதத்தாலும் அதிகரித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கடும்வரட்சி நிலவுகிறது.

21.07.89 (திசை)

கதிர்காமத்தில் திருவிழாவின்போது துணையமைச்சரை நோக்கி வீசப்பட்டதாகச் சொல்லப்படும் குண்டுகள் வெடித்ததில் அங்கு குழுமியிருந்த மக்களில்13 பேர் கொல்லப்பட்டனர்.200 பேர் வரை காயமடைந்தனர்.

21.07.89 (வீரகேசரி)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் இயங்கி வரும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால்த யாரிப்புத் தொழிற்சாலை இம் மாதத்துடன் தனது 2வருடகால ஒப்பற்ற சேவையைப் பூர்த்தி செய்துள்ளது.கடந்த 2வருட காலங்களில் சுமார்300 செயற்கை கால்,கை,அவயவங்களை இந்நிறுவனம் உற்பத்தி செய்து உதவியுள்ளது.தொடர்ந்து நன்கொடைகளை இந் நிறுவனம் நாடி நிற்கிறது.

ஜூன் 21முதல் ஜூலை 15 வரை தெற்கில் 1,088 குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன.இவற்றுள் 412சம்பவங்கள் கொலைகளாகும்.வடக்கு,கிழக்கில் 70 கொலைகள் உட்பட 97 குற்றச் செயல்கள் நிகழ்ந்துள்ளன.

23.07.89 (வீரகேசரி)

தொடர்ந்து பெய்துவரும் மழைகாரணமாக இரத்தினபுரிப் பகுதியிலுள்ளபல கிராமங்களில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.இதனால் சுமார் 500 குடும்பங்கள் அரசாங்கக் கட்டிடங்களிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளன.

"ஈரோஸ் உறுப்பினர்களின் பாதுகாப்புக்குத் தன்னியக்கத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.இத்தகைய பாதுகாப்புத் தங்களுக்குத் தேவையானால் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் என்னிடமோ,ஜனாதிபதியிடமோ பேசியிருக்கலாம்.நாம் உரிய பாதுகாப்பு ஏற்பாட்டை வழங்குவோம்.ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களுக்கு இந்தியப்படை பாதுகாப்பு வழங்குவதாகவேநாம் கருதினோம்.கொழும்பில் இந்தியப்படை பாதுகாப்பு வழங்க முடியாதிருக்கலாம்" – ரஞ்சன்விஜேரத்ன

25.07.89 (வீரகேசரி)

திகாரியில் வீசிய சூறாவளியினால் மூவர் கொல்லப்பட்டனர்.சுமார் 60 பேர் வரை காயமடைந்தனர்.

www.tamilarangam.net

நீர்வேலியைச் சேர்ந்த மகாலிங்கம் மகேஸ்வரன் என்ற யாழ் மத்திய கல்லூரி மாணவன் வீட்டிலிருந்து அழைத்து வரப்பட்டு கோண்டாவில் பகுதியில்வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கனகசபை சிவனேசன் என்ற சண்டிலிப்பாய் வாலிபர் கொழும்பு செல்வதற்காக பஸ் ஏற வந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

கந்தையா வேலாயுதகுமார் என்றவாலிபர் கோண்டாவிலில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ராஜலட்சுமி சீவரட்ணம் என்ற பெண்மணி யாழ் நாச்சிமார் கோவிலடியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வேலைநாட்கள் பதினெட்டாகக்குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தொழிலாளரின் ஆகக் குறைந்த வருமானத்திலும் வேட்டு வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, நெல்லியடி, புலோலி, வியாபாரிமூலை ஆகிய பகுதிகளில் கடந்த 2 வாரங்களாக மோதல், தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்றன. இத் தாக்குதல்களினால் 15 பேர் கொல்லப்பட்டனர்.

இன்பருட்டியில் தனியார் வாகனம் ஒன்றின் மீது படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சி. உதயராசா, க. பாபுதாஸ், எஸ். இரத்தினம் ஆகியோர்கொல்லப்பட்டனர்.

பருத்தித்துறையில் பலசரக்குக்கடை, செருப்புக்கடை, தேநீர்க்கடை, இருவீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

27.07.89 (வீரகேசரி)

ஈழமக்கள் புரட்சிகர முன்னணி, ஈழத்தேசிய ஜனநாயகவிடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக் கழகம் ஆகிய மூன்றும் இணைந்து 'தமிழ்த் தேசியசபை என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளன.

உழைக்கும் மக்களின் ஒன்றிணைந்த இயக்கம் என்ற பெயரில் 10 தொழிற்சங்கங்கள் துண்டுப்பிரசுரம் மூலம் 'சகல ஊழியர்களுக்கும் ஆகக் குறைந்த சம்பளம் 2,500ரூபா, தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம், 1980 வேலை நிறுத்தத்தில் வேலை இழந்தவர்களுக்கு மீண்டும்வேலை' போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

30.07.89 (வீரகேசரி)

நாட்டின் நாலா பகுதிகளிலும் 28.07.89இல் நடைபெற் அரச எதிர்ப்பு, இந்திய இராணுவ எதிர்ப்பு ஊர்வலங்களில் பாதுகாப்புப்படையினரும், பொலிசாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 143பேர்கொல்லப்பட்டனர்.

31.07.89 (வீரகேசரி)

வடமாராட்சிப் பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் 15 பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். துன்னாலையில் 3பெண்கள் கொல்லப்பட்டனர். 5 கடைகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.


வாழைச்சேனை காகிதஆலை வளவில் புதிய இந்திய இராணுவ முகாம்அமைக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கானலை மிதித்தவள்

– பார்த்திபன்

"ஸ்ரட்டுக்கு வாறியா?" பாலகுமார் இறுக்கமான ஜீன்சுக்குள்இடுப்புக்கு கீழானபகுதிகளை நுழைத்து ஸிப்பைப் பூட்டியபடி கேட்டான்.

"இப்ப பாக்காட்டும் ஒருதரிட்டயும் வாங்கேலாது.என்ன அலுவலாய் போறாய்?" முத்து தனது அலுமாரிக்குள்ளிருந்த சொத்துகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான்.

"லோயரிட்ட போக வேணும்.தனியப் போக அலுப்பாயிருக்கு.வந்தியெண்டு கதைச்சுக் கொண்டிருக்கலாம்"

"விசிற்றிங் றூமில இருந்து கொண்டு ஊர்க்கதையள் வம்பளக்கிற பழக்கம் இன்னும் தான் மாறேல.சரி நானும் வாறன்.இண்டைக்கு முழுக்க இதுக்க இருந்தது விசராயிருக்குது"

"கெதியனை வெளிக்கிடு.ரமீன் பிந்தினா பிறகு லோயரைச் சந்திக்கேலாது"

முத்து செய்து கொண்டிருந்த அலுவலுக்கு திடீர் முற்றுப்புள்ளியைப் போட்டு, தலை நனைத்துப் பின் கோதி, சாயம்போன ஜீன்ஸ் கொழுவி, சேட்டை உள்ளேவிட்டு, பிறகு கொஞ்சம் மேலே தளர்த்தி ... விரைவில் தயாராகிவிட்டான். காசை மறக்காமல் எடுத்துக் கொண்டதும் இருவரும் புறப்பட்டார்கள்.

நகரத்தில் பஸ் அவர்களை வெளியே தள்ளியதும் ஏனையவர்களுடன் பரவினார்கள்.கோடை காலப் பாடசாலை விடுமுறையினால் மாணவர்களில் தொண்ணூறு வீதமானோர் முழுச் சுதந்திரமாக காதலன்கள், காதலிகளுடன், குடிவகைகளுடன், வாகனங்களுடன் உல்லாசமாக இருந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தார்கள். சிலரின் சிக்கலமான உடைகளில் வெட்கப்படக்கூடிய வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சைக்கிள்கள் கொஞ்சக்கால விடுதலையில் உற்சாகமாய் இருந்தன.

மூன்றும் உலகநாடுகளிலிருந்து வருகிக் கொண்டிருந்த பொருட்களைக் கவர்ச்சியாக்கி, வாடிக்கையாளர்களைக் கவர்ந்து கொண்டிருந்த கடைகள், தங்களின் கவர்ச்சியாலேயே பெருந்தொகை சம்பாதித்துக் கொண்டிருக்க, அதே கடைகளில் வேலை செய்து கொண்டிருந்த பலர் இரவு ஒன்பது மணிவரை வியாழக்கிழமைகளில் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை இனி எப்படி எதிர்க்கலாமென யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

பாலகுமாரும், முத்துவும் பிராக்குப் பார்த்தபடியே சட்டத்தரணியிடம் வந்தார்கள். காத்திருக்கும் அறையில் அவர்களை சிறிது நேரத்திற்குக் காத்திருக்கும்படி உதவியாளினி சொன்னாள். இருவரும் அறைக்குள் போனபோது, வேறு பல தமிழ்கள் அங்கு ஏற்கெனவே காத்திருந்தன.

இவர்கள் இருவரும் சம்பிரதாயச் சிரிப்பைப் பிரசுரித்துவிட்டு காலியான ஆசனங்களில் அமர்ந்த போது, ஏனையோர் பலத்த விவாதத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

"என்னப்பா அடுத்தடுத்துப் பெரிய தலையள் விழுகுது"

"அரசியல் என்டால் தலையள் விழாம பனங்காயே விழும்"

"அந்தக் காலத்தில கூட்டணிக்கு இரத்தப் பொட்டுகள் வைச்சனங்கள். இப்ப சனங்கள் தலைவர்மார் செத்ததிலகூட அக்கறை காட்டேல" என்று கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னவருக்கு வயது போயிருந்தது.

"ஒவ்வொருநாளும் எத்தினை அப்பாவிச்சனங்கள் சாகுது. அதுகளைப்பற்றியே கவலைப்படுகுறதுகளைக் காணேல. இதுக்க இந்தியாவில இருந்து போட்டு வெச்சனுக்கெண்டுதிரும்பி வந்து, அதிலயும் குப்புற விழுந்து, விடாப்பிடியா அரசாங்கத்தின்ரை தயவோட தேசிய எம்பியாப் போனவை செத்தா ஆர் கவலைப்படப் போகினம்?"

"வளத்த கடா மாரிலபாயுமெண்டு சொல்லுவங்கள். கடைசியா கொழும்பில வைச்சே கடாக்கள் பாய்ஞ்சிட்டுது" தாடி வைத்திருந்தவர் நிதானமாகச் சொன்னார்.

பாலகுமாரும், முத்துவும் ஒருவரையொருவர் பார்த்து கண்களால் சிரித்துக் கொண்டார்கள். இன்னும் இருவர் சேர்ந்தால் தரையில் உட்கார்ந்து தாயம் விளையாடலாம் போல், அந்தக் காத்திருக்கும் அறையில் தாராளமாகத் தமிழ் புழுங்கியது.

இலங்கைச் சம்பவங்களைக்கிளறிக் களைத்துப் போனவர்கள் அதன்பின்தான் அங்கு வந்திருந்த பா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லகுமார், முத்துவின் மேல் கவனத்தைத் திருப்பினார்கள்.

"அண்ணை எந்த ஸிரட்?"

"நாங்கள் இததான்" பாலகுமாரின் சிக்கனப் பதில். 'அறஞ் செய்ய விரும்பு, ஆறுவது சினம்' என்ற ஔவையாரின் பாட்டு மாதிரி சம்பிரதாயக் கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கில் தொடர்ந்தன.

"வந்து கனகாலமோ?"

"சீ, அஞ்சு வருசமாகுது"

"உங்க என்ன மாதிரி? இமிக்கிரேசன் குடுக்கிறாங்களோ?"

"அப்பிடியொரு அசுமாத்தையும் காணேல"

"ஆறு அங்காலிப்பக்கம் அஞ்சு வருசம் முடிஞ்ச வைக்கே குடுக்கிறாங்களாம்"

"எங்காலிப்பக்கம்?" என்று பாலகுமாரோ, முத்துவோகேட்கவில்லை. அவர்களுக்கு இந்தப் பதில்கள் புளித்துப் போயிருந்தன.

"வேலையள் எப்பிடி பதியிறாங்களோ?"

"எங்க பதியிறாங்கள். தேடி எடுக்கிறதே கஉ்டமாக் கிடக்கு. அப்பிடி எடுத்துக்கொண்டு போனாலும் ஆபைபற்சம்காறன் சைன் பண்ணிறானில்ல. முந்தி முதல் டொச்சு, பிறகு யூரோப் எண்டாங்கள். இப்ப குறுக்கை அவுஸ்சீட்லராம்"

"அறு அங்காலிப்பக்கம் ரண்டு மணித்தியாலம், நாலு மணித்தியாலம் சைன் பண்ணிறாங்களாம்"

கொஞ்ச நேரத்திற்கு முதல் கதைத்த அரசியற் கொலைகள் ஏன் நடந்தன? இதனால் யார் இலாபமடைந்தார்கள்? என்று ஆராயமுற்படாமல் வேலை, நிரந்தர வதிவிட அனுமதி என்ற தற்போதைய தங்கள் பிரச்சினைகளுக்குள் அவர்கள் மூழ்கிவிட்டார்கள். அநேகமாக இதைவிட்டு அதிக தூரம் அவர்கள் போவதில்லை.

"பாலாக்குமர்" உதவியாளினி கஉ்டமாகப் பாலகுமாரை அழைக்க, அவன் எழுந்து சட்டத்தரணியிடம் போனான்.

"என்ன விசயமாய் லோயரிட்ட வந்தனியள்?" தனித்த முத்துவிடம் ஒருவர் புதினம் பிடுங்கினார்.

"இப்ப லோயரிட்ட போனவர் கனடா போய் பிடிபட்டவர். அந்தப் பைலுகள் கட்டுற விசயமாய்த்தான்..." முத்து சுருக்கமாக முடிக்க, மற்றவர் விடுகிறாற் போலில்லை.

"எப்ப நடந்தது? இஞ்சயே எயப்போட்டில பிடிச்சிட்டாங்களோ இல்லாட்டி வேற நாட்டுக்கு எங்கயேன் போய் திருப்பியனுப்பினவங்களோ?"

"இஞ்சயே எயப்போட்டிலபிடிச்சு ஆளை நாலு மாசம் உள்ளுக்க போட்டிட்டு விட்டிருக்கிறாங்கள்"

"எந்த எயப்போட்? ஏன்உள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுக்க போட்டவங்கள்? அப்பிடிப் போட சட்டமில்லயே" என்று மற்ற வர் விருவிருத்துக் கேட்க, முத்து பொறுமையிழந்து விபரமாகப் பதி லளித்தான்.

சிறிது நேரம் கழித்துப் பா லகுமார் வந்தான். "முடிஞ்சிதே?" "ஓம். இருபதிருபதாய் மாதாமாத ம் கட்டட்டாம்"

"போட்டு வாறம்" என்றபடி இருவரும் வெளியேறியபோது, அங்கி ருந்தவர்கள் மறுபடி இலங்கைக்குப் போயிருந்திருந்தார்கள்.

"எக்கச்சக்கமான பெடியள் வந்து கொழும்பில நிக்குதுகளாம்"

பாலகுமாரும், முத்துவும் மறு படி நகர மத்திக்கு வந்தபோது இன்னமும் சனங்கள் குறைந்திருக்கவி ல்லை. கோப்பிக் கடையொன்றின் முன்னால் துருக்கியர் நின்று தங்கள் மொழியில் கரகரத்துக் கொண்டிரு ந்தார்கள். ஒரு கிழவர் நீண்ட நே ரமாக எக்கோடியனில் பழையபா டல்கள் வாசித்து இரண்டு மார்க் சேர்த்திருந்தார்.

"சாமானுகள் ஏதேன் வாங் கிக்கொண்டு போவமோ?" பாலகு மார் கேட்டான்.

"என்னத்தை வேண்டிறது? என க்கெண்டால் சமைக்கிறதும், சாப்பி டுறதும் அலுத்துப் போச்சு" முத்து உண்மையாகவே சலித்துக் கொண் டான்.

"வேற என்ன புதுசா செய் யப் போறுய்? அஞ்சு வருசமா இப் பிடிச் சொல்லி சொல்லி இப்பிடி யேதான் இருக்கிறம். என்னத்தைக்கி ழிச்சது? இஞ்சயும் ஒழுங்காச் சீவிக் கேலாதாம். எங்கயும் தப்பிப்போ யி நல்லா இருக்கலாமெண்டா அது க்கும் விடுகிறாங்களில்ல"

"நீயும் உதையே திருப்பித்தி ருப்பிச் சொல்லிக் கொண்டிரு"

"என்னடாப்பா செய்ய"

ஐந்து வருடங்களையும் எப்ப டிக் கழித்தோம் என்று நினைத்துப் பார்க்கையில் இருவருக்கும் ஆச்ச ரியம் வந்தது. உற்சாகமில்லாமல் கடைக்குப் போய் ஏதோதாதோவெ ன்று பொருட்களை வாங்கிக் கொ ண்டு வெளியில் வந்தபோது, வசந் தன் அறக்கப் பறக்க வருவதைக்க ண்டார்கள்.

"எங்கடாப்பா?"

"தன்சானியாவுக்கு ரெலி போன் பண்ண வேணும். நேரம்சென் டுபோச்சு. பிறகு சந்திப்பம்" வசந் தன் சொல்லிக் கொண்டே மறைந் தான்.

"தன்சானியாவுக்கோ? தன் சானியாவுக்கும் வசந்தனுக்கும் என் ன சம்பந்தம்?" முத்து புரியாமல் கேட்டான்.

"புதுச் சம்பந்தம். உவனை த்தான் இப்ப வெளிநாட்டமைச்ச ராய் போயிருக்கினம். நீ இப்ப எந்த உலகத்தில இருக்கிறுய்? அவனு க்குப் பேசிவந்த பொம்பிளை தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாளியாவில நிக்குதாம். அது தான் ஒரு கிழமையா காலில சுடுதண்ணி ஊத்திக்கொண்டு திரியிருன்" என்று விளக்கிறன் பாலகுமார்.

"பள்ளிக்கூடத்தில சமூகக்கல்வி படிக்கேக்க கூடி கேள்விப்படாத நாடெல்லாம் இப்ப எங்கட சனத்திற்கு தண்ணியாய் போச்சு. இனிச் சோதினை எடுத்தா புவியியல் அந்தமாதிரி பாஸ் பண்ணலாம்"

"ஒண்டரை, இரண்டெண்டு சனங்கள் அந்தரிச்சுக்கொண்டு வருகுதுகள். உனக்குப் பகிடியாயிருக்கென்ன"

"ஒண்டரை, இரண்டோ?" முத்து வாயைப் பிளந்தான்.

(இன்னும் வரும்)

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு முரண்பாட்டின் தாக்கம் தேடலை விரிபடுத்தி எழுதத் தூண்டுவதிலிருந்து விடுபட்டு, இங்கு பல எழுத்தாளர்களும் எழுதுவதற்கு கருக்களைத் தேடுகிறார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்க விடயம். இவற்றை மனதிற் கொண்டு இன்று ஐ. த. சமூகத்தில் உருவாகி, வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் இங்கு வாழும் எமது சமூகத்தின் தன்மைகளையும் அதன் முரண்பாடுகளையும் ஆய்வு செய்து அதை வெளிக்கொணரும் படைப்புகளை உருவாக்க வேண்டியதும், ஐரோப்பிய கலை, இலக்கிய, கலாச்சாரத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவற்றை வெளிக் கொணர்வதும் மிக முக்கியமானதும் இன்றைய அவசியப்பாடுமாகும்.

---

மேற்கு நாடுகளில் தமிழர் சமூகம் ஒன்று தவிர்க்க முடியாதபடி இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. மேற்குலகின் அபிவிருத்தியையும், வளர்ச்சியையும் முற்போக்கான அம்சங்களையும் முடியுமானவரை உள்வாங்கும் சாத்தியத்தை இச் சமூகம் வளர்த்துக் கொளளுதல் வேண்டும். ஆனால் இதனை எவரும் பெரிய அளவில் உணர்ந்ததாய்த் தெரியவில்லை. மேற்குலகின் முன்னேற்றகரமான பௌதிக ரீதியிலான வசதிகளை (material comforts) முடியுமானவரை அனுபவித்துக் கொண்டிருந்தபோதும் இத் தமிழர் சமூகம் வேறு விடயங்களில் மூடிய மனப்போக்கையும் வைதீகப் பெறுமானங்களையுமே பேணுகின்றது. கலை, இலக்கிய விடயங்களில் ஆழ்ந்த தேடுதலின்மை இதன் ஒரு வெளிப்பாடாகும். இந் நிலை மாறுதல் வேண்டும். ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'' எனப் பாடினன் பாரதி. கொணர்ந்திங்கு சேர்க்கும் நிலை எமக்கில்லை. ஆனால் அவை பற்றிய அறிவையாவது உள்வாங்கும் ஆர்வம் எமக்கு ஏற்பட்டாலே போதுமானது. இந்தக் கைங்கர்யத்தை தமிழரிடம் ஏற்படுத்த இச் சஞ்சிகைகள் சிறிய அளவிலாவது முனைதல் வேண்டும்.

–சித்ரா

14·07·89 நிசையில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கு ஜேர்மனியில் தமிழர்களின் இலக்கிய முயற்சிகள்

- சு. இந்திரன் -

எழுபதுகளில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி இலக்கியத்தில் ஒரு திடீர்ப் பாய்ச்சலை ஏற்படுத்தியது. இந்திய வியாபாரச் சஞ்சிகைகளின் வருகையின்மையை அடுத்து பல்வேறு சஞ்சிகைகள் காலத்திற்குக் காலம் தோன்றி மறைந்தன. ஒரு சில பிரதிகளோடு பல சஞ்சிகைகள் மறைந்து போனாலும், அவை ஈழத்தில் ஏற்படப் போகின்ற இலக்கியப் புரட்சியை அல்லது வளர்ச்சியை எதிர்வு கூறி நின்றன. இக் காலத்தில் தான் அநேக கையெழுத்துப் பிரதிகளும் இலங்கையின் மூலை முடுக்கிலெல்லாம் வெளிவந்து கொண்டிருந்தன. அக்காலத்தில் தினபதியில் அறிமுகப்படுத்தப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை மட்டுமே கணக்கில் கொள்ளாது இன்னும் தரமான முயற்சிக்கு முனைவிட்ட கையெழுத்துப் பிரதிகள் ஏராளம் மின்னி மின்னி மறைந்தன.

மேலும் புதுக் கவிதை பற்றிய வாதப் பிரதி வாதங்களும், புதுக்கவிதையின் இலகுபடுத்தப்பட்ட தன்மையும், எல்லோரும் கவிதை எழுதலாம், புரிந்து கொள்ளலாம் என்ற துணிவும், தூண்டலும் நம்காலத்து வாசக மக்களிடமும், மாணவர்களிடமும் ஏற்பட்டதை யடுத்தும், எழுத்தாளர்கள் என்று தனியான இலக்கியச் சர்ச்சையில், இலக்கியப் பிரச்சினைகளில் ஏறி அமர்ந்திருந்தவர்களை விலக்கி, அரசியல், சமூகம், விஞ்ஞானம் போன்றவற்றில் முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களின் பிரவேச அதிகரிப்பும் ஈழத்தின் ஆக்கங்களுக்கு ஒரு தரமான இலக்கியச் சூழலை நிறுவின என்றோ அல்லது ஒரு ஆரோக்கியமான இலக்கியச் சூழலில் ஆக்கங்கள் பிறப்பெடுக்க வழிவிட்டன என்றோ கூறலாம்.

அரசியல் போராட்டம், அதனைத் தொடர்ந்த வர்க்கப் போராட்ட முனைப்பு, இன்று அரசியற், பொருளாதாரத்துறையில் மட்டுமல்லாது, இலக்கிக் காலாச்சாரத்துறைகளிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, தனது எல்லைகளையும் தாண்டி, தமக்கு அப்பாலுள்ள சக்திகளையும் ஒருவகைத் தூண்டலுக்குள்ளாகியிருப்பதை எங்கும் அவதானிக்க முடிகின்றது.

வெறுஞ் சோசலிஸ, கொம்யூனிஸ, தேசியக் கோசங்களாக ஆரம்பித்த கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என்பவைகூட இன்று புதிய பரிமானம் பெற்று உணர்வுபூர்வ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான நிலைக்கு வந்தடைந்துகொண்டிருப்பதை பல படைப்புகள் காட்டி நிற்கின்றன.

ஆரம்பத்தில் நிலவிய 'இந்தியத் தரம் மிக்க படைப்புகள்' என்ற நிலை மாறி, ஈழப் படைப்பாளிகள் தாம் உள்வாங்கிய அனுபவரீதியான பிரச்சினைகளை, அரசியல் அறிவை இன்று மொழியாக்கிக் கொண்டிருக்கின்றனர். இதனால் இவர்கள் படைப்புகள் கனதியாய், உணர்ச்சியாய், உயிரைப் பிழிந்த இரத்தச்சுவடுகளாய் இன்று நம்முன்னே ஒளி தருகின்றன.

அடக்குமுறையின் உச்சநிலையில் ஆயுதப் போராட்ட முன்னெடுப்பு ஒரு புறம் நிகழ, அதேவேளை திறந்த பொருளாதாரத் திட்டமும் இனவாத அரசியல் நடைமுறைகளும் கூர்மையாக்கிய சமூகப் பிரச்சினைகளுக்குட்பட்ட தமிழர் தூக்கியெறியப்பட்டு அரபு நாடுகளிலோ, மேற்கு ஐரோப்பிய நாடுகளிலோ, அமெரிக்க நாடுகளிலோ வந்து விழுந்தனர். 1983களுக்குப் பின்னர் ஏற்பட்ட கொடூரத்தின் உச்சநிலை இன்னும் மத்தியதர தமிழர்களை மேற்கு ஐரோப்பிய அகதிகளாக்கியது.

அகதிகளாக இந்த நாடுகளுக்கு வந்தவர்களிற் சிலபேர் சமூகப் பொறுப்பு மிக்க பிரக்ஞையோடும், சமுதாயப் பிரச்சினைகளை எழுத்தில் தருபவர்களாகவும், ஈழப் போராட்டத்தின் 'தேக்கத்தின்' போதும், திருப்புமுனையின் போதும் தத்தமது மேலோட்டமான விருதலைஇயக்கச் சார்பு நிலையால், அந்தந்த இயக்கம் ஈழப் போராட்டத்தை எவ்வாறு பார்க்கிறதோ அவ்வாறு கண்டு குரல் எழுப்பியும் எழுதினார்கள்.

1981க்குப் பின்னர் மேற்கு ஜேர்மெனியில் மட்டும் சுமார் இருபதிற்கும் மேற்பட்ட கையெழுத்து, தட்டச்சுச் சஞ்சிகைகள் தமிழில் தோன்றி, இவற்றில் பல இன்னும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

மேற்கு ஜேர்மெனியில் இதுவரை வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளாவன:

1. எண்ணம்
2. யதார்த்தம்
3. சிந்தனை
4. தாயகம்
5. தென்றல் (1)
6. தென்றல் (2)
7. வெளிச்சம்
8. புது யுகம்
9. நம்நாடு
10. யாத்திரை
11. அறுவை
12. கலை விளக்கு
13. அகதிகள் குவியம்
14. ஏலையா
15. நமது குரல்
16. வெகு ஜனம்
17. வண்ணத்துப் பூச்சி
18. புதுமை
19. தூண்டில்
20. தேனீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவரை வெளிவந்த கவிதைத் தொகுப்புகளாவன:

1. தீ - சித்திவிநாயகம்பிள்ளை
2. கவிதைச் சோலை - விக்கு பாக்கியநாதன்
3. அழிவின் சுவடுகள் - "

கட்டுரைத் தொகுப்புகள்:

1. எண்ணங்கள் புதிது - ப.வி.சிறிரங்கன்
2. தலைவன் யார்? - "
3. மானிடத்தின் மறுபக்கம் -விக்கு பாக்கியநாதன்
4. சிந்தனைக்குரிய உருவகங்கள் -சு.பாக்கியநாதன்

7. வித்தியாசப்படும் வித்தியாசங்கள் - "
8. பாதி உறவு - "
9. ஜங்கள் விற்பனைக்கு - "
10. யோகி மலர் - யோகினி யோசப்
11. உறவுக்குப் போராட்டம் - விக்கு பாக்கியநாதன்
12. கடலில் ஒரு படகு - காசி
13. மனங் கலங்கிய மன்னன் - "
14. அவன் காட்டிய வழி - "
15. புதிய திருப்பம் - "

(தொடரும்)

சிறுகதைத் தொகுப்புகள், குறுநாவல்கள், நாவல்கள்:

1. மௌனத்தில் அழுகின்ற மனங்கள் - இந்துமகேஉத்
2. விடியலுக்கில்லைத் தூரம்- "
3. நீலவிழிப் பாவைகள் - "
4. மறுபடியும் நாங்கள் - "
5. நிஜங்கள் - பார்த்தியன்
6. ஜனனம் - "

இக் கட்டுரையில் குறிப்பிடப்படாத வெளியீடுகள் வெளிவந்திருப்பின் அவற்றில் ஒவ்வொரு பிரதியை தூண்டில் முகவரிக்கு அனுப்பி வைத்தால் கட்டுரையாளருக்கு அவற்றை கிடைக்கச் செய்வோம்.

-கடலோடிகள்

---

நிகரகுவாப் புரட்சி என்ற கட்டுரையில் உள்ள வரைபடத்தில் எண்களால் குறிக்கப்பட்டுள்ள நாடுகள்:

1. மெக்சிக்கோ
2. குவாற்றமாலா
3. எல்சல்வடோர்
4. கொண்டுராஸ்

கறுப்பு நிறத்தில் உள்ள பகுதி - நிகரகுவா

6. கொஸ்ரறிக்கா
7. பனமா
8. கியூபா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெகுஜனம் (யூன்-யூலை 89) இதழில் வெளிவந்தவை:

கடலோடி நண்பர்களுக்கு:

[illegible]

இலக்கியச் சந்திப்புப் பற்றி வெகுஜனம்:

முத
லாவதாக கிடைத்த பரிசு தான்
டியின் அங்கதாரருக்கு கிடை
த்தது. அவர்வராணமையால் அப்
பரிசை அவர் சார்பில் கடலோ
டி பெற்றார். பார்த்திபனுக்கு பரி
சுகள் கிடைக்கப் பெற்றபோ
து அவர் அதைப் பெற மறுத்
து பரிசு கொடுக்கிவிட்டதுடன்
தங்கள் உள்முரண்பாட்டையும்
சந்திப்பாளருக்கும் பரிசு அளிப்
பவருக்கும் வெளிக்காட்டிவிட்
டார். இவைதவிர எல்லாம் இனி
தே நடந்தது.

ஐரோப்பிய தமிழ் சமுகமும், எழுத்தாளர் பங்கும்

கிடைக்க வேண்டிய மக்களுக்கு தனது படைப்புகளைக் கிடைக்கச் செ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ய்வதில் ஒரு படைப்பாளி அக்கறை காட்டாமலிருப்பாரானால், அவரது படைப்புகள் கட்டுரையாளர் குறிப்பிட்டபடி ஒப்பாரி வைக்கும் தன்மையுடையதாக அல்லது உணர்வுகளையும், முரன்பாடுகளையும் விற்பனைசெய்வதாகவே அமையும். ஆனால் அவரது படைப்புகள் கிடைக்க வேண்டிய மக்களுக்கு கிடைக்காமல் ஏனையோருக்கு கிடைப்பதால் அப்படைப்புகளுக்கான இலக்கு முழுமையடையவில்லையேயன்றி, எந்தவிதப் பாதிப்புகளையும் ஏற்படுத்திவிட மாட்டாது எனக் கூறமுடியாது. இந்தரீதியில் கட்டுரையாளர் குறிப்பிட்டிருப்பதுபோல் எந்தவித பிரயோசனமுமிருப்பதில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

வெகுஜனம் (யூன்–யூலை 89) இதழில் வெளிவந்த கருத்துகள் பற்றி.

விமர்சனம் என்பது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கும், சரியானவற்றைப் பலப்படுத்தவுமே தவிர நன்றி, பாராட்டுகளுக்காக அல்ல.

1) சம்பந்தமேயில்லாத இந்திய இராணுவம் (?)
2) இந்திய இராணுவம் பற்றிநாம் எழுதாமைக்கு (?)

என்ற உங்கள் பதிலிலேயே இந்திய இராணுவ அராஜகம் பற்றிய உங்கள் கண்டுகொள்ளாமையை அல்லது மறைப்பை ஒத்துக்கொண்டுள்ளீர்கள்.

நீங்கள் பட்டியல் போட்டிருக்கும் அராஜகங்களின் (மூலமா? கிளையா?) வரிசையில் உங்களாலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் இந்திய இராணுவ அராஜகம் பற்றி சம்பந்தமில்லாத இராணுவம் என்றும், அது பற்றி எழுதாமலிருக்கிறோம் என்றும் கூறுகிறீர்களே !

"... கிளை அராஜகங்களைமுதி பக்கங்களை நிரப்பி, புத்தகம் நடத்தி, வரவேற்புப் பெறத் தயாராயில்லை..." எனக் குறிப்பிட்டுள்ள அதே பந்தியில்தான் "... அனைத்து அராஜகங்களையும் எதிர்க்கின்ற அதேவேளையில்..." என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

உலகப் பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்துள்ளதாகச் சொல்லிக்கொள்ளும் நீங்கள் இலங்கைத் தீவிலுள்ள மக்களை இரண்டாகப் பார்த்திருப்பதேன்?

நீங்கள் உண்மைக்கு முரணாக இருப்பதாலேயே விமர்சித்தோம். அரசியல் கலக்காத அரசியல் சஞ்சிகைகளையெல்லாம் விமர்சிக்க வேண்டுமென்றில்லை.

பரிசு கேடா?

பரிசை வாங்க மறுத்ததல்ல, பரிசளிப்புத்தான் பரிசுகேடாயிருந்தது.

உள்முரன்பாடு?

கலம் 19இல் வெளியான 'இலக்கியச் சந்திப்பு' என்ற ஜோசப்பின் கட்டுரையை இன்னுமொருமுறை படித்துப் பாருங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிகராகுவாப் புரட்சி

—பொன். தனசேகரன்

1979ஆம் ஆண்டு யூலை19ம் திகதி லத்தீன் அமெரிக்காவில் உள்ளநிகரகுவா மக்களுக்கு மிக முக்கியமான நாள். அன்று சன்டினிஸ்டா விடுதலை இயக்கத்தின் தலைமையில் அங்கு புரட்சிகர அரசு நிறுவப்பட்டது. நிகரகுவா மக்கள் போராட்டத்தின் வெற்றி பல்வேறு தேசங்களில் புரட்சியாளர்களுக்குப் புதுஉற்சாகத்தை அளித்துள்ளது.

## நிகரகுவா

தென், வட அமெரிக்கக் கண்டங்களை இணைக்கும் குறுகிய நிலப்பிரதேசத்தில் நிகரகுவா அமைந்துள்ளது. இதன் வடக்கில் கொண்டுராஸ், தெற்கே கொஸ்ரரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. நிகரகுவாவின் மொத்தப் பரப்பளவு 1 இலட்சத்து 28ஆயிரம் சதுர கிலோமீற்றர்கள். மக்கள் தொகை 30 இலட்சம்.

ஸ்பானியர்களுக்கும், உள்நாட்டிலுள்ள தொல்குடிகளுக்கும் பிறந்த மெஸ்ரிசா (Meztiza) இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்நாட்டின் மக்கள் தொகையில் 96சதவீதமாயுள்ளனர். மெஸ்ரோ, ரமா, சுமா இந்தியர்கள், கிரியோலாஸ் இனத்தவர் ஆகியோர் மீதமுள்ள 4சதவீதத்தில் அடங்குவர். மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நகரங்களில் வசிக்கிறார்கள். கிராமங்களில் வசிப்பவர்கள் இந்நாட்டில் மிகவும் குறைவு. நிகரகுவாவின் மக்கள் தொகையில் கால் பகுதியினர் அந்நாட்டின் தலைநகரான மனகுவாவில் வசிக்கிறார்கள்.

இந்த நாட்டின் தேசிய வருமானம் விவசாயப் பொருளாதாரத்தைச் சார்ந்திருக்கிறது. பருத்தி, கோப்பி, கரும்பு போன்ற வணிகப் பயிர்கள் இங்கு பயிரிடப்படுகின்றன. இந்நாட்டின் அந்நியச் செலாவணி கால்நடை ஏற்றுமதி வருமானம் மூலமே கிடைக்கிறது.

## காலனியாட்சியின் வரலாறு

நிகரகுவா 16ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டின் காலனி நாடாக இருந்தது. பின்னர் அத்திலாந்திக் கடற்கரைப் பகுதியை ஆங்கிலேயர் ஆண்டனர். 1921இல் ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து நிகரகுவா விடுபட்டது. அதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1855இல் அமெரிக்க இராணுவம் நிகரகுவா மீது தாக்குதல் நடத்திக் கைப்பற்றியது. வில்லியம் வாக்கரே என்ற அமெரிக்கத் தளபதி நிகரகுவாவின் அதிபதியாகத் தன்னை அறிவித்துக் கொண்டார். ஆங்கிலேய மொழியை அவர் தேசிய மொழியாக்கினார். அந்த அரசை அமெரிக்க அங்கீகரித்தது.

1912இல் நிகரகுவாவைதன் நேரடி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் நிகரகுவாவிற்கு அமெரிக்க அரசு கடற்படையை அனுப்பியது. அமெரிக்க கடற்படையை எதிர்த்து நிகரகுவா மக்கள் போரிட்டனர். அமெரிக்க கடற்படையினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. சொந்த இராணுவபலத்தினால் மட்டும் நிகரகுவா மக்களை அடிமைப்படுத்தி வைக்க முடியாது என்று உணர்ந்துகொண்ட அமெரிக்க ஏகாதிப்பத்தியம் வேறு சூழ்ச்சியைக் கையாண்டது.

சோமோசா என்பவன் தலைமையில் தேசிய பாதுகாப்புப்படை என்ற பெயரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நிகரகுவாவில் ஒரு கூலிப் படையை உருவாக்கி, அதற்கு இராணுவத் தளவாடங்களை வழங்கிப் பயிற்சியளித்தது. சில காலத்தில் அமெரிக்காவின் கைப்பொம்மையான சோமோசா நாட்டின் அதிபரானான்.

அதன்பின் நாட்டின் பெரும்பான்மையான சொத்துகளை அவன் தனது குடும்பச் சொத்தாக்கிக் கொண்டான். 20ஆயிரம் சதுர கிலோமீற்றருக்கு மேற்பட்ட சாகுபடி நிலங்கள் அவனுக்கும், அவனது உறவினர்களுக்கும் சொந்தமாக்கப் பட்டது. அதில் ஆண்டில் 500 மில்லியன் டொலருக்கும் மேற்பட்ட வருமானமும் அவனுக்குச் சென்றது.

நாட்டின் முக்கிய ஏற்றுமதியான இறைச்சி ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்கள் அவன் உறவினர்களுக்குத்தான் வழங்கப்பட்டன. சீனித்தொழிற்சாலைகளில் பாதிக்கு மேற்பட்டவை சோமோசாவிற்கே சொந்தம். 40சதவீத அரிசி உற்பத்தி அவனுக்குச் சொந்தமாய் இருந்தது. இது தவிர விமானக் கொம்பனி பத்திரிகை, வானொலி நிலையம், தொலைக்காட்சி நிலையம் ஆகியவையும் சோமோசாவிற்கே சொந்தம்.

சோமோசாவின் சுரண்டல் ஆட்சியில் மக்கள் கருமையான பஞ்சத்திற்கும், துன்பத்திற்கும் ஆளானார்கள்.

<u>சன்றினோ</u>

சோமோசாவின் ஆட்சிக்கெதிராக அகஸ்ரினோ சன்றினோ என்ற புரட்சியாளரால் தேசிய விடுதலைப்பாதுகாப்புப் படை நிறுவப்பட்டது. 1933இல் கெரில்லாப் போர்முறையில் சன்றினோ நாட்டின் பல பகுதிகளை சோமோசாவின் பிடியிலிருந்து விடுவித்து புரட்சிகர நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினார். சோமோசாவின் ஆட்சி ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும்போது புர

www.tamilarangam.net

ட்சிப் படையினரால் மீட்கப்பட்ட பகுதிகளில் புரட்சிகர அரசு உருவாக்கப்பட்டது.

சன்றினோ ஆரம்பித்த தேசியவிடுதலைப் போராட்டத்திற்குத் தேசிய ரீதியிலோ, சர்வதேச ரீதியிலோ ஆதரவு கிடைக்கவில்லை. இதற்கிடையில் 1934இல் சோமோசாவின் பேச்சுவார்த்தைக்கு இணங்காத சன்றினோ வீடு திரும்பும்போது சோமாசாவின் கூலிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து சன்றினோ ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். சோமோசாவின் சர்வாதிகார ஆட்சி நிகரகுவாவில் மக்களை தனது இரும்புப் பிடியில் நசுக்கி வெறியாட்டம் ஆடத் தொடங்கியது. இந்நிலை 1961ஆம் ஆண்டுவரை தொடர்ந்தது.

## சன்றினிஸ்ரா விடுதலை இயக்கம்

1961ஆம் ஆண்டில் சன்றினோ நினைவாக சன்றினிஸ்ரா சன்றினிஸ்ரா விடுதலை இயக்கம் கர்லோஸ் பொன்சேகா என்பவரால் துவக்கப்பட்டது. இந்த விடுதலை இயக்கத்தின் கெரில்லாப்படையினர் நிகருகுவாவின் வடக்கு எல்லைப பிரதேச மலைப் பகுதிகளிலும், பள்ளத் தாக்குகளிலும் தாக்குதலைத் தொடங்கினர். இந்த இயக்கத்திற்கு நாடுமுழுவதும் மக்கள் மத்தியில் செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது.

1978இல் சன்றினிஸ்ரா கெரில்லாக்கள் 25பேர் தேசிய மாளிகையைக் கைப்பற்றி பணயமாக 1கோடி டொலரை சோமோசா அரசிடமிருந்து பெற்றனர். 80 அரசியல் கைதிகளையும் விடுவித்தனர். இதைத் தொடர்ந்து சன்றினிஸ்ரா தேசிய விடுதலை இயக்கம் நாடு தழுவிய கிளர்ச்சியைத் தொடங்கியது. சோமோசா அரசு இதனை அடக்க வன்முறையைப் பயங்கரமாக கட்டவிழ்த்துவிட்டது.

1979இல் யூலை 17ஆம்திகதி நாட்டில் தொடர்ந்து ஆட்சியை நிலைநிறுத்த முடியாது என்ற நிலையில் சோமோசோ தப்பியோடி அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தான். 17ஆம் திகதி சன்றினிஸ்ரா தேசிய விடுதலை முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றியது.


இந்தப் போராட்டத்தில்50 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். 1இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். 40ஆயிரம் குழந்தைகள் அநாதைகள் ஆயினர். 2 இலட்சம் குடும்பங்கள் வீடிழந்தன. ஏழரை இலட்சம் மக்கள் உணவிற்காகப் பிறரிடம் கையேந்தும் நிலையேற்பட்டது. சோமோசா நாட்டின் கருவூலத்தில் விட்டுச் சென்றது 3.5 மில்லியன் டொலர் மட்டுமே.

சோமோசா ஆட்சியைவிட்டு ஓடுவதற்கு முன்னதாக 1979 மே மாதம் சர்வ்தேச நிதி உதவி நிறுவனம்(IMF) 66மில்லியன் டொலர் கடன் வழங்கியது. அந்தத்தொகை யூலை 1ஆம் திகதி மனகுவாவி

www.tamilarangam.net

உள்ள மத்திய வங்கியில் போடப்பட்டது. சோமோசாவை எதிர்த்து கிளர்ச்சி அதிகரிக்கவே அந்த வங்கி மூடப்பட்டது. புரட்சிக்குப் பின்னால் அந்த வங்கியில் போடப்பட்டிருந்த அந்த 66 மில்லியன் டொலர் தொகையும் சோமோசா பெயரில் வேறு ஒரு வெளிநாட்டு வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டது தெரிய வந்தது. இவ்வாறு அரச பணத்தைச் சுருட்டிக்கொண்டு சோமோசாவெளியேறிவிட்டான்.

சோமோசாவின் வீழ்ச்சியின் போது கூலிப்படையினரால் 200 மில்லியன் டொலர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.




## நிகரகுவாப் புரட்சியின் தனித் தன்மை

சன்ரினிஸ்ரா விடுதலை முன்னணியில் இருந்தவர்கள் பெரும்பாலும் தேசிய குட்டி பூர்சுவாக்கள் தான். அவர்கள் மரபுரீதியான மார்க்சிச தத்துவத்தைக் கற்றுத் தேர்ந்தவர்கள் அல்ல. சன்ரினிஸ்ரா விடுதலை இயக்கம் வெளிப்படையாக 'மார்க்சிசம்', 'சோசலிசம்' என்ற முழக்கங்களை முன்வைத்ததில்லை. மரபுரீதியான மார்க்சியர்கள் ஆயுதமேந்திய போராட்டத்தை நடாத்தவில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஆயுதப் போராட்ட அவசியம், சமூக, பொருளாதார அரசியல் அமைப்பு மாற்றம், சுரண்டப்படும் வர்க்கம் தங்கள் விடுதலையை தாங்களே சாதித்துக்கொள்ளல், ஆட்சி முடிவுகளில் பங்கு முதலிய கொள்கைகளைக்கொண்ட 'சன்ரினிஸ்மோ' அதன் கொள்கைப் பிரகடனமாக வெளியிடப்பட்டது. சன்ரினிஸ்மோவிற்கும், மார்க்சியத்திற்கும் உள்ள ஒத்ததன்மைகள் மற்றும் உறவுகள் குறித்து அவர்கள் மத்தியிலேயே தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகின்றன.

ரஷ்யா, சீனா, கியூபா போன்ற நாடுகள் உட்பட எந்த நாட்டின் புரட்சிகர முன்மாதிரியையும் பின்பற்ற சன்ரினிஸ்ரா விடுதலைஇயக்கம் மறுத்து வருகிறது. புரட்சிகர மாதிரிகளை எந்திரத்தனமாகக்கடைப்பிடிப்பதில் அர்த்தமில்லை என்பதை அவர்கள் நம்புகின்றனர். நிகரகுவாவிற்கேற்ற புரட்சியைப்பற்றித்தான் சிந்திக்க வேண்டும் என்பது அவர்களது தீர்க்கமான அபிப்பிராயம். 'மக்கள் அதிகாரத்தைப் பெறுவது இலட்சியம்', 'தொழிலாளர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவசாயிகள் புரட்சிக்கு முதுகெலும்பு'இதுதான் அவர்கள் முன் வைக்கும் கோசம்.

சன்டினிஸ்டா விடுதலை முன்னணி தனிநபர் தலைமையில் இயங்குவது அல்ல. 9பேர் கொண்ட இயக்குநர் குழுதான் பின்னர் புரட்சிகர கட்சியாக மாறியது.

நிகரகுவா சனத் தொகையில் 16சதவீதம்பேர் உழைக்கும் வர்க்கத்தினர். அவர்களில் 50 சதவீதம்பேர் விவசாயத்திலும், அரசுப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளவர்களும், குட்டிப் பூர்சுவாக்களும், பூர்சுவாவேலைகளிலும் உள்ளவர்கள். விவசாயிகளில் 8சதவீதம் பேர் நிலமற்றவர்கள். 33சதவீதம் விவசாயிகள் சிறிது நிலம் வைத்திருந்த போதிலும் கூட பருவ சாகுபடியை மட்டுமே நம்பியிருக்கும் ஏழை விவசாயிகள் தான்.

நிகராகுவாவில் இளைஞர்கள் பெண்கள், தொழிலாளர்கள், வேலையற்றவர்கள், குட்டி பூர்சுவாக்கள் ஆகியோர் சர்வாதிகாரத்தை எதிர்த்து போராட்டத்தில் கிளர்ந்தெழுந்தனர். புரட்சிகர இராணுவத்தின் பெரும்பகுதி நகரங்களில் தான் இருந்தது. சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து கெரில்லா தாக்குதலிலும் மக்களை அமைப்பாகத் திரட்டுவதிலும் சன்டினிஸ்டா விடுதலை முன்னணி ஈடுபட்டது.

உழைப்பாளர்களைச் சுரண்டும் முதலாளிகளை எதிர்த்தும், ஊழலைக் கண்டித்தும், சர்வாதிகார அடக்குமுறையை எதிர்த்தும்தான் மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். ஜனநாயக உரிமைகளை மீட்கவும், அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றக் கோரியும்தான் மக்கள் இந்தக் கிளர்ச்சிகளைத் தொடங்கினர்.

1972இல் பூகம்பத்திலல் நாடு முழுவதிலும் வறுமை கோரத்தாண்டவம் ஆடியது. நிவாரணத்திற்காக தரப்பட்ட பணம் சரியான வளர்ச்சி திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை. இதனால் பூர்சுவாக்கள் உட்பட நடுத்தர மற்றும் கத்தோலிக் கத் திருச்சபையைச் சேர்ந்தவர்களும் சோமோசாவிற்கெதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

சன்டினிஸ்டா மக்கள் முன்னணி நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் மக்கள் குழுக்களை அமைத்தது.

நிக்கரகுவாவில் இப்போது சாத்தியமாகக் கூடியது என்ன?

புரட்சிக்குப் பின்னல் நிகரகுவாவில் உள்ள வெளிநாட்டு மூலதனங்களை, நிறுவனங்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும், பூர்சுவாக்களுக்கு ஆட்சியில் இடமளித்திருப்பதும் குறித்து நிகரகுவா ட்ரொஸ்கிய கொம்யூனிஸ்ட் கட்சி(PCN) சந்தேகத்தைத் தெரிவித்தது.

"சன்டினிஸ்டா விடுதலை முன்னணியால் முதல் புரட்சி நடந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டது. இரண்டாம் கட்டப் புரட்சி கொம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் தான் நடக்கும்" என்றும் அக்கட்சி கூறியது.

நிகரகுவாவில் கலப்பு பொருளாதார அமைப்புத்தான் தொடர்ந்து நிலவும் என்பதை சன்றினிஸ்ரா விடுதலை முன்னணி மீண்டும் உறுதிப்படுத்தியது. சர்வாதிகாரி சோமோசோவிற்குச் சொந்தமான சொத்துகள் தேச உடைமை ஆக்கப்பட்டன. வங்கிகளும் அரசுக் கட்டுப்பாட்டில் வந்தது. 75 சதவீத அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் விவசாய ஏற்றுமதியை நிகரகுவா அரசு தனது பொறுப்பில் வைத்துக் கொண்டது.

நாட்டில் 50 சதவீத நிலங்கள் அரசுக் கட்டுப்பாட்டில் இருந்தது. மற்ற நிலங்கள் தனியாரிடமும் பண்ணுட்டு நிறுவனங்களிடமும் இருந்தன.

தொழிற்சாலை உற்பத்தியிலும், நிர்வாகத்திலும் தொழிலாளர்களுக்குப் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. நிகரகுவாவிலிருந்து வெளிவரும் 3 பத்திரிகைகளில் அதிக விற்பனையாவது எதிர்கட்சிப் பத்திரிகையான லா பிறென்சா (La Prensa) தான்.

அங்கு வாழும் கிறிஸ்தவர்கள் பல்வேறு கட்சிகளில் உள்ளனர். சன்றினிஸ்ராக் கட்சியைச் சேர்ந்த 5 கிறிஸ்தவத் துறவிகள் மந்திரி சபையில் அமைச்சர்களாக உள்ளனர். இவர்கள் அதிகார பூர்வமான தேவாலயம் மற்றும் போப் ஆகியோரின் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

(இக் கட்டுரையின் மிகுதி அடுத்த கலத்தில்).

---

(வெளியே)

"ஐயோ பாவம். வெள்ளப் பாதிப்பா? கவலைப்படாதீர்கள். உங்களுக்கான நிவாரணப் பொருட்களை விரைவில் அனுப்பி வைக்கிறேன். நீங்கள் போய் பழையபடி தொடர்ந்து வேலையைச் செய்யுங்கள். ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். என்னை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்"

(உள்ளே)

கொஞ்சம் பிச்சையைப் போட்டால்தானே இவர்கள் தொடர்ந்து வேலையைச் செய்வார்கள். இவர்கள் தொடர்ந்து பழையபடி வேலை செய்தால்தானே நான் இப்படி உல்லாசமாக இருக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்படமாட்டாது.


ஒகஸ்ட் 1989 கலம்: 20

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்



முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633


சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன் அட்டையில்.....

கருப்பஞ் சருகுகளுக்குள்ளும்
கோப்பி மர நிழலிலும்
நாங்கள் அடைகாத்த
நெருப்புக் குஞ்சு வளர்கிறது
வல்லூறுகளின் கறுப்பு நிழலை எரித்தபடியே.

நான் பிரசவித்த குழந்தைக்காக
பிரத்தியேக சிந்திப்புக்கு
இடமில்லை
நமது குழந்தைகள் என்றானபோது.

குழந்தைகள்
முலைக்காம்பிலிருந்தே
தேடலை ஆரம்பிக்கட்டும்.

நாளை
வல்லூறுகள் வட்டமிடும்
அத்தனை கோடுகளையும்
ஆராய்ந்தாக வேண்டும்.

ஏனெனில்

அவை ஆக்கிரமித்து
அசுத்தப்படுத்திய
ஆகாயம் மீட்கப்பட்டு
அங்கே
சிட்டுக்குருவியும்
சமபங்கில் சிறகடிக்க வேண்டும்.

- சிவம் -